இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered as a Catholic Weekly (G.P.O.197) Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360, Main Street, Jaffna, Sri Lanka: Tel: 021-222 2378 Fax : 021 222 9041 -E-mail: editorkavalan@gmail.com ISSN 1391-7633

மலர்: 142 இதழ் : 02 திகதி: 04.02.2018 விலை : 20.00

## மணிவிழாக் காணும் புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர்



யா/ புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர் ம.ஜெறோ செல்வநாயகம் அடிகளார் இளைப்பாறுவதை முன்னிட்டு கல்லூரி சமூகத்தினரால் கடந்த 30.01.2018 மணிவிழா நிகழ்வு வெகுசிறப்பாக முன்னெடுக்கப்பட்டது.

யாழ். மரியன்னை பேராலயத்தில் ஆயர் பேரருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் கூட்டுத் திருப்பலியுடன் இந்நிகழ்வு ஆரம்பமானது.

தொடர்ந்து புனித பத்திரிசியார் வீதியிலிருந்து மணிவிழா நாயகன் கல்லூரி பிரதான மண்டபம் வரை கல்லூரி சமூகத்தினரால் அழைத்து வரப்பட்டு விழா நிகழ்வுகள் நடைபெற்றன.

அருட்பணி ம.ஜெறோ செல்வநாயகம் அடிகளார் 2010 ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரை கல்லூரியின் அதிபராகக் பணியாற்றியதுடன், ஆசிரியராக, பகுதித் தலைவராக, உப அதிபராக 30 வருடங்களுக்கு மேல் இக் கல்லூரியில் கல்விப் பணிபுரிந்தார்.

கல்வி, விளையாட்டு மற்றும் இணைப்பாட விதானச் செயற்பாடுகளில் புனித பத்திரிசியார் கல்லூரி சாதனைகளை நிகழ்த்துவதற்கு வழிகாட்டி நின்ற அதிபர் தந்தை அவர்கள் கல்லூரியின் வளர்ச்சிக்குப் பல்வேறு பரிணாமங்களில் அயராது உழைத்தமை குறிப்பிடத்தக்கது.

(12ம் பக்கம் தொடர்ச்சி)

## திருப்பாலத்துவ சபையால் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்



திருப்பாலத்துவ சபையின் தேசிய இயக்குநர் அருட்பணி பசில்றொகான் அடிகளாரினதும் மற்றும் யாழ் மறை மாவட்ட திருப்பாலத்துவ சபை இயக்குநர் அருட்பணி S.A. றொஷான் அடிகளாரினதும் அனுசரணையின் கீழ் யாழ் மறை மாவட்டத்திலுள்ள பெற்றோர்களை இழந்த 100 பாடசாலை மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் கடந்த வாரம் வழங்கப்பட்டது. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மறை மாவட்டங்களைச் சேர்ந்த நூறு மாணவர்களுக்கு வழங்கப்பட்ட இவ் உபகரணங்களின் ஒரு தொகுதியை யாழ் ஆயர் பேரருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் மாணவர்களுக்கு ஆயர் இல்லத்தில் வைத்து வழங்கினார்.

## உங்கள் வாக்குரிமையை பொறுப்புடன் பயன்படுத்துங்கள்

### யாழ் மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு 10.02.2018 உள்ளூராட்சி சபைத்தேர்தல் சம்பந்தமாக விடுக்கும் அறிக்கை

ஒரு நாட்டின் குடிமக்கள் எல்லோரதும் அடிப்படை உரிமைகளிலொன்று வாக்குரிமை. இதனைப் பொறுப்புடன் நிறைவேற்றுவது குடிமக்களது சமூகப் பொறுப்பும் கடமையுமாகும்.


10.02.2018 இல் இடம்பெறவிருக்கும் உள்ளூர் அதிகார சபைத் தேர்தலில் வாக்குரிமையுள்ள ஒவ்வொருவரும் தமது வாக்குகளைப் பொறுப்புடன் அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

உள்ளூர் அதிகார சபையின் முக்கியமான பொறுப்பு நகர கிராம உட்கட்டமைப்பு, மக்களின் வேலை வாழ்வாதாரப்பிரச்சினைகளைத் தீர்த்தல், மக்களின் நலன் சார்ந்த திட்டங்களை வகுத்தலும் செயற்படுத்தல் போன்றவையாக இருந்தாலும் தற்போதைய நிலையில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பிரச்சினை, கணிசமான மக்கள் தமது காணிகளையும், வீடுகளையும், விளைநிலங்களையும் பறிகொடுத்த நிலையிலிருப்பது, அரசியல் கைதிகள் விவகாரம் ஆகிய பிரச்சினைகள் இன்றும் பூதாகாரமாக உள்ளன.

கடந்த ஒரு வருடமாக இவற்றால் பாதிக்கப்பட்ட மக்கள் நடத்திவரும் அமைதிப் போராட்டம் கண்டுகொள்ளபடாமையே நீடிக்கின்றது. எனவே இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டால் தான் நல்லிணக்கமும், அபிவிருத்தியும் ஏற்படும். எனவே இவை சம்பந்தமாக இதய சுத்தியுடன் விடாமுயற்சியுடனும் செயற்பட்டு மிகவிரைவில் தீர்வு காணக் கூடிய கட்சியையோ, குழுவையோ இனம் கண்டு அவர்களுக்கு உங்கள் வாக்குகளை அளியுங்கள். புதிய உள்ளூர் அதிகாரச்பைத் தேர்தல்கள் ..

(12ம் பக்கம் தொடர்ச்சி..)

## புனித பத்திரிசியார் கல்லூரியின் புதிய அதிபர் பதவியேற்பு



யா/ புனித பத்திரிசியார் கல்லூரியின் புதிய அதிபராக அருட்பணி A.P.திருமகன் அடிகளார் யாழ் ஆயர் பேரருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை முன்னிலையில் கடந்த 25.01.2018 அன்று பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

புதிய அதிபர் பதவியேற்பு நிகழ்வு யாழ் மரியன்னை பேராலயத்தில் ஆயர் தலைமையில் நடைபெற்ற கூட்டுத் திருப்பலியுடன் ஆரம்பமானது.

புதிய அதிபர் கல்லூரிச் சமூகத்தால் சிறப்பான முறையில் வரவேற்கப்பட்டார். யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்கலாநிதி P.J.ஜெபரட்ணம் அடிகளார் முன்னிலையில் அதிபர் பணிமனையில் புதிய அதிபர் பதிவேட்டில் கையொப்பமிட்டு தன் பணியை பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வில் கல்லூரியின் மாணவர்கள், ஆசிரியர்கள் மறை மாவட்டக் குருக்கள் எனப் பலரும் பங்குபற்றினர்.

## உள்ளூராட்சி தேர்தலில் வாக்காளரின் பங்கும் பொறுப்பும் பற்றிய கருத்தமர்வு

உள்ளூராட்சி அதிகார சபை தேர்தல் நீதியானதும் உண்மைத்தன்மை உடையதாகவும் நடைபெறுவதற்கான நடைமுறைக் கருத்தமர்வு இலங்கை கரிதாஸ் செடெக் நிறுவன அனுசரணையுடன் கியூடெக் கரிதாஸ் இயக்குனர் அருட்பணி ச.இயூஜின் பிரான்சிஸ் அடிகள் தலைமையில் கியூடெக் மண்டபத்தில் 30.1.2018 அன்று நடைபெற்றது.

இக்கருத்தமர்வில் பவ்ரல் அமைப்பின் இணைப்பாளர் திரு.ஸ்ரீதரன் அவர்களும் யாழ். பல்கலைக்கழக அரசறிவியல் துறைத் தலைவர் காலநிதி K.T.கணேசலிங்கம் அவர்களும் வளவாளர்காளக கலந்து கொண்டனர்.

மன்னார், கிளிநொச்சி கரித்தாஸ் இயக்குனர்களும்சமயத் தலைவர்கள், பொது மக்கள் பங்கேற்ற இக்கருத்தமர்வில் புதிய தேர்தல் முறையிலான உள்ளூராட்சி பிரதிநிதிகள் தெரிவுகளும், வாக்களிப்பு முறைமைகளும், உள்ளூராட்சி தேர்தல் முறைக் கோட்பாடுகளும், எதிர்கொள்ளும் சவால்களும், நீதியான தேர்தலை முன் எடுக்கும் வழிமுறைகள் பற்றிய கருத்தமர்வும், கலந்துரையாடலும் இடம்பெற்றது.

## கிளி மறைக்கோட்ட முதல்வராக அருட்பணி J.A.யேசுதாஸ் அடிகளார் நியமனம்



கிளி மறைக்கோட்ட முதல்வராக அருட்பணி J.A.யேசுதாஸ் அடிகளாரை யாழ் ஆயர் யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை நியமித்துள்ளார். கிளிநொச்சி புனித திரேசாள் ஆலய பங்குத் தந்தையாக பொறுப்பேற்கும் அடிகளார் கிளிநொச்சி மறைக்கோட்ட முதல்வராகவும் பணிப்பொறுப்பேற்கின்றார். அருட்பணி யேசுதாஸ் அடிகளார் புனித ஹென்றியரசர் கல்லூரியில் அதிபராகப் பணியாற்றி, ஓய்வு பெற்ற நிலையில் இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

## கொழும்புத்துறை துறைமுகத்தில் புனித யோசப் வாஸ் திருச்சுரூபம் அமைக்கப்பட நடவடிக்கை எடுங்கள்

### குரு முதல்வர் வேண்டுகோள்

எமது நாட்டின் திருத்தூதர் புனித யோசப் வாஸ் எமது யாழ். மண்ணில் காலடி வைத்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கொழும்புத்துறை துறைமுகத்தில் புனிதரின் ஒரு திருச்சுரூபத்தை ஸ்தாபிக்க நடவடிக்கை எடுக்குமாறு யாழ். மறைமாவட்ட குரு முதல்வர் அருட்பணி. யோசப்தாஸ் ஜெபரட்ணம் அடிகளார் வேண்டுகோள் விடுத்தார். கடந்த ஜனவரி மாதம் 20ம் திகதி கொழும்புத்துறை எழிலூரில் நடைபெற்ற புனித யோசப் வாஸ் ஆண்டு நிறைவுதினா விழாவின் போதே குருமுதல்வர் மேற்படி கூறினார். அவர் மேலும் கூறுகையில், திருச்சுரூபம் அமைக்கும் பணிக்கு தேவையான உரிய உத்தரவுகளை சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டு அனைவருடைய சம்மதத்தோடும் ஒத்துழைப்போடும் இதனைச் செய்ய வேண்டுமென்று வலியுறுத்தினார்.

( 12ம் பக்கம் தொடர்ச்சி)

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா:127:1)

# எமது எண்ணம்

## உள்ளூராட்சி சபைத் தேர்தல் – 2018

இலங்கையின் அரசியல் வரலாற்றில் மீண்டும் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு மக்கள் முகங்கொடுக்கவுள்ளனர். இத் தேர்தலில் இலங்கையிலுள்ள பல கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும் களமிறங்கியுள்ளன.

உள்ளூர் மட்டத்தில் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை சிறப்பாக, சுகாதாரம், சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு, குடிநீர் வசதி கல்வி போன்றவற்றில் கூடிய கவனம் செலுத்தி மக்கள் பயன்பெறும் வகையில் செயற்படுவதற்காகவே இத்தேர்தலில் மக்கள் தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்யவேண்டிய தேவை உள்ளது.

அரசியல் உள்நோக்கங்களைக் களைந்து அரசியல் கண்ணோட்டத்தில் இத்தேர்தலை நோக்காமல் மக்களின் அத்தியாவசியத் தேவைகளை பூர்த்தி செய்வதற்குரிய தேர்தலாகவே இத்தேர்தலை நோக்க வேண்டியுள்ளது. கட்சிகள் தமக்கிடையேயான அரசியல் வேறுபாடுகளை மறந்து தமது மக்களின் தேவைகளை மட்டும் கருத்திற்கொண்டு அவற்றை உரிய முறையில் செயற்படுத்த ஆவன செய்யவேண்டும்.

தமிழ் மக்கள் தரப்பில் இத்தேர்தல் தொடர்பாக பலதரப்பட்ட எண்ணங்கள் தோற்றம் பெற்றிருப்பது கண்கூடு. நாங்கள் இவ்வளவு காலமும் தேர்தலில் வாக்களித்து கண்ட பயன் என்ன? எனவே இம்முறை தேர்தலில் வாக்களிக்காது நடப்பது நடக்கட்டும் என்ற மனோ நிலையில் பலரை அவதானிக்க முடிகிறது.

சில கட்சிகள் ஒற்றுமையை மறந்து, ஒன்றாகச் செயற்பட வேண்டியதன் அவசியத்தை மறந்து, கதிரைகளை பாதுகாப்பதையே நோக்கமாகக் கொண்டு ஐக்கிய நாடுகள் சபை பற்றியும், உரிமைகள் பெறுவது பற்றியும் அநாவசியமான கருத்துக்களை முன்வைத்து தமது வெற்றியைத் தக்க வைத்துக்கொள்ள முயற்சிக்கின்றன.

இத்தேர்தலில் இவை பற்றி பரப்புரை செய்வது வீணாகக் காலத்தைப் போக்கடிக்கும் செயலாகும். குறிப்பாக தமிழர் தரப்பினரிடையே ஏற்பட்டுள்ள பிளவுகள் மக்கள் மத்தியில் பல வினாக்களை எழுப்பி அவர்களை பதட்டமடைய வைத்துள்ளன. தேர்தலில் ஒரு வெறுப்பை ஏற்படுத்தியுள்ளது.

இருப்பினும் இத்தேர்தல் தொடர்பாக தமிழினம் வாழாவிருக்கக்கூடாது. கொள்கைப்பிடிப்புள்ளவர்கள் இத்தேர்தலைப் புறக்கணிப்பது யானை தன் மீது சேற்றை வாரி இறைப்பதற்கு ஒப்பாகும்.

தமிழ்த் தலைவர்களிடையேயான ஒற்றுமையீனம் தமிழ் மக்களின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கி விடக்கூடாது. மக்கள் ஆழமாகச் சிந்தித்து செயற்படவேண்டிய தருணமிது. இத்தகைய நிலையில் வாக்களிக்காது இருந்துவிடலாம் எனப் பல மக்கள் எண்ணலாம்.

ஆனால் தமிழ் மக்களில் அநேகர் இவ்வாறான முடிவை எடுப்பார்களேயானால் தகுதியற்றவர்கள் தலைமைப் பதவிகளைப் பிடிப்பதற்கு நாங்களே வழி அமைத்துக் கொடுப்பவர்களாக மாறலாம்.

அதனால் மக்கள் தங்கள் வாக்குரிமையைச் சரியாகப் பயன்படுத்தி தமது பிரதிநிதிகளைத் தெரிந்தெடுப்பது மிக மிக அவசியமானதும் அத்தியாவசியமானதும் காலத்தின் தேவையுமாகும்.

"காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு" என்பது போல எமது இனத்தைப் பாதுகாத்து வழிநடத்துவதும் தமிழ் மக்களின் கைகளிலேயே தங்கியுள்ளது.

அரசியலில் பெரும் மேதை எனப் பெயர் பெற்ற அறிஞர் பிளேற்றோ "அரசியலில் பங்கேற்க நாம் விரும்பாது விட்டால் நம்மை விரும்பாதவர்கள் எம்மை ஆட்சிபுரியும் நிலை ஏற்பட்டு விடும்" என்கிறார்.

"கழுதை தேய்ந்து கட்டெறும்பாகிய கதையாக" தமிழினத்தின் நிலை மாறிவிடலாம். இத்தேர்தல் காலத்தில் பெரும்பாலான அரசியற் கட்சிகள் தமது பரப்புரையில் நிறைவேற்ற முடியாத பல வாக்குறுதிகளை முன்வைத்து போட்டியிடுகின்றனர்.


வாக்காளர்கள் வக்கில்லாதவர்கள் என்ற எண்ணத்தில் இவர்கள் செயலாற்றுகின்றனர். வெளிச்சம் இல்லாத ஊர்களுக்குள் நிலாவையும், நட்சத்திரங்களையும் கொண்டு வந்து ஒளி தருவோம் என்கின்றது ஒரு தரப்பு. பாலைவனத்தில் பயிரிட்டு விளைச்சல் பெருக்கித் தருகின்றோம் என்கின்றது இன்னுமொரு தரப்பு. கடலே இல்லாத ஊருக்கு கப்பல் கட்டித் தருவோம் என்கின்றது மற்றுமொரு தரப்பு. வாக்காளர்களின் காதில் பூச்சுத்தும் கதையாக உள்ளது இவர்களது நடவடிக்கைகள். இத்தருணத்தில் தேவைப்படுவது ஒற்றுமையுடனான கூட்டுணர்வே. ஒற்றுமையை சிதறடிக்காது முகமூடி அணிந்து நல்லவர்கள் போல் காட்சியளிக்கும் வாக்குறுதி வழங்கும் போலி வள்ளல்களை இனங்கண்டு செயற்படுவதே இன்றைய காலத்தின் தேவையாகும்.

மக்கள் விழிப்படைந்து, வாக்களிக்காமல் இருக்கும் மனநிலையை மாற்றி, போலியான தலைவர்கள் பதவிகளைப் பற்றிக்கொள்ளாதிருக்க நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயலாற்ற முன்வருவோம்.

ஆகவே வாக்களிப்பது ஒன்றே எமது முக்கிய கடமையாகும் என்பதை உணர்ந்து நம்பிக்கையுடன் செயற்படுவோம்.

அருட்பணி.எஸ்.எமின்சிலி றொஷான்

# கனடா றொறன்ரோ தமிழ் கத்தோலிக்க சமூகத்திலிருந்து ஒரு புதிய அருட்பணியாளர்



கத்தோலிக்கத் திருச்சபையில் ஒரு புதிய பிரான்சிஸ்கன் சபைத் துறவியாக அருட்திரு றொஷான் கபிரியேல் அந்தோனிப்பிள்ளை O.F.M. (Cap.) அவர்கள் தம்மை அர்ப்பணித்துள்ளார்.

இவர் கடந்த 2017, மார்கழி மாதம் 9ம் திகதி அமெரிக்காவின் பென்சில்வேனியா மாநிலத்தின் பிட்ஸ்பேக் நகரில் உள்ள பிரான்சிஸ்கன் சபையின் கப்புச்சின் தலைமைப் பேராலயத்தில் பேராயர் டேவிட் சூபிக் அவர்களால் பிரான்சிஸ்கன் சபைக் O.F.M. (Cap.) குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

இவர் யாழ். மறைமாவட்டத்தின் சில்லாலைப் பங்கைச் சேர்ந்த நீக்கிலாப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை அவர்களதும், அச்சுவேலிப் பங்கின் இவோன் (மகிழ்வதி) திருச்செல்வம் அவர்களதும் இளைய புதல்வன் ஆவார்.

1972, கார்த்திகை மாதம் 23ம் திகதி நீர்கொழும்பில் பிறந்த இவர் தனது கல்வியை பம்பலப்பிட்டி புனித பீற்றர் கல்லூரியில் ஆரம்பித்தார். 1983ம் ஆண்டு இனக்கலவரத்தினால் இடம்பெயர்ந்து யாழ்ப்பாணத்திற்கு வந்து புனித பத்திரிசியார் கல்லூரியில் தனது கல்வியைத் தொடர்ந்தார்.

1985ன் இறுதியில் குடும்பத்துடன் புலம்பெயர்ந்து கனடாவில் குடியேறி தனது கல்வியைத் தொடர்ந்த இவர் சிறப்புத்தகைமைகளைப் பெற்று றொறன்ரோ பல்கலைக்கழகத்தில் பொறியியல்துறையில் சிறப்புப் பட்டத்தைப் பெற்றார்.

அமெரிக்காவின் வொஷிங்டன் மாநிலத்தின் திறைசேரி நிதியத்தின் உயர் பதவியில் ஒரு தசாப்தத்திற்கு மேலாகப் பணியாற்றிய இவர் இறையழைப்பை உணர்ந்து பென்சில்வேனியா மாநிலத்தில் உள்ள பிரான்சிஸ்கன் சபையின் கப்புச்சின் பிரிவில் 2009ல் இணைந்து கொண்டார்.

எட்டு ஆண்டுகள் உருவாக்கத்தின் பின்னர் குருவாக திருநிலைப்படுத்தப்பட்ட இவர் பப்புவா நியூ கினியாவில் மறைபரப்புப் பணிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ். மறை மாவட்டத்தின் சொத்து என்ற வகையில் இவரது குருத்துவத்திலும், மறைபரப்புப் பணியிலும் நாமும் மகிழ்ந்து இறைவனுக்கு நன்றிப் புகழ் பாடுவோம்.

# முல்லைத்தீவில் புதிய பங்குப் பணிமனை



முல்லைத்தீவு இராயப்பர் ஆலய புதிய பங்குப் பணிமனை 26.01.2018 யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களால் ஆசீர்வதித்து திறந்து வைக்கப்பட்டது.

புனித இராயப்பர் ஆலய பங்கு மக்களின் அயராத முயற்சியினாலும், பங்குத்தந்தையின் ஊக்குவிப்பினாலும் புதிய பங்குப் பணிமனை நிர்மாணிக்கப்பட்டது.

ஆழிப்பேரலையினாலும் போரினாலும் இப்பங்குப் பணிமனை முற்றாக சேதமுற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# உனக்குள்ளே நான் இறுவெட்டு வெளியீடு

அருட்பணி M.நிர்மலராஜ் CR அடிகளாரின் தயாரிப்பில் உருவான "உனக்குள்ளே நான்" திருப்பலி ஆராதனை மற்றும் நடனப்பாடல்கள் அடங்கிய இறுவெட்டு 01.02.2018 அருள் ஆச்சிரமத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ் ஆயர் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு.நா.வேதநாயகம் அவர்களும் மாகாண பொதுச்சேவைகள் ஆணைக் குழுவின் செயலாளர் திரு. மோகன் ராஸ் அவர்களும் கலந்துகொண்டனர். ஆயர் அவர்கள் இறுவெட்டை வெளியிட்டு வைக்க அரசாங்க அதிபர் பெற்றுக் கொண்டார். மதிப்பீட்டுரையை அருட்பணி போல் றொபின்சன் அடிகளார் நிகழ்த்தினார்.

# யாழ் மறைமாவட்ட கத்தோலிக்க கலைஞர் விபரம் சேகரிப்பு

யாழ் மறைமாவட்டத்தில் சேவையாற்றும் கத்தோலிக்க கலைஞர்களின் விபரங்களை பெற்று ஆவணப்படுத்தும் செயற்பாடு ஒன்றினை யாழ் மறைமாவட்ட கலை கலாசாரக் குழு மேற்கொண்டுள்ளது.

இதற்கமைவாக விண்ணப்படிவமொன்று பங்குத்தந்தையர் மூலமாக விநியோகிக்கப்படுகின்றது. எனவே யாழ் மறைமாவட்டத்தினைச் சேர்ந்த கத்தோலிக்க கலைஞர்கள், எழுத்தாளர்கள், தமது விபரங்கள்,பணிகள், சாதனைகள் போன்றவற்றினை பதிவு செய்து பங்குத்தந்தையர் மூலமாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கடந்த 27.12.2017 அன்று யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியில் நடைபெற்ற மேற்படிக் குழுவின் கூட்டத்தில் மேற்படி முடிவு எடுக்கப்பட்டது.

இக்குழுவுக்கு பொறுப்புவகிக்கும் அருட்பணி ஜெறோ செல்வநாயகம் அடிகளின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் எதிர் காலத்தில் கலை கலாசாரக் குழுவினால் மேற்கொள்ளக் கூடிய செயற்றிட்டங்கள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது. இக்கூட்டத்தில் கிளிநொச்சி முல்லைத்தீவு, தீவகம், இளவாலை, யாழ்ப்பாணம் ஆகிய மறைக்கோட்டங்களைச் சார்ந்த பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

# தியோகு நகர் புனித யோசவ் வாஸ் ஆலய திருவிழா

புனித யோசவ் வாஸ் ஆண்டை முன்னிட்டு முல்லைத் தீவு தியோகு நகரில் கடந்த வருடம் புதிதாக அமைக்கப்பட்ட புனித யோசவ் வாஸ் ஆலயத்தில் 21.01.2018 திருவிழா சிறப்பாக நடைபெற்றது.

யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி யஸ்ரின் ஞானப் பிரகாசம் ஆண்டகை அவர்களால் திருவிழா திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

ஆயர் அவர்கள் மறையுரையாற்றுகையில் புனித யோசவ் வாஸ் அவர்கள் இலங்கைக்கு வந்து மறையைப் பரப்பக் காரணமாக இருந்தவர்கள் பொதுமக்களாகிய விசுவாசிகளே எனக் கூறினார். நிறைவாக புனிதரின் திருச்சொரூபப் பவனியுடனும் ஆயர் அவர்களின் ஆசீர்வாதத்துடனும் திருப்பலி நிறைவு பெற்றது.

அருட்தந்தை எரிக் றொசான், அருட்தந்தை சோபன், அருட்தந்தை யோர்ச் ஆகியோரும் ஆயருடன் இணைந்து திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர்.

கடந்தவருடம்இவ்வாலயம் பங்குத்தந்தை அருட்பணி ஜோர்ச் அடிகளாரால் திறந்து வைக்கப்பட்டதுடன் 20.01.2018 அன்று அடிகளாரால் நுழைவாயிலும் திறந்து வைக்கப்பட்டது.



# கச்சதீவு புனித அந்தோனியார் திருத்தல திருவிழா

கச்சதீவு புனித அந்தோனியார் திருத்தல வருடாந்த திருவிழாவும் தவக்கால யாத்திரையும் எதிர்வரும் 23.02.2018 வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, 24.02.2018 சனிக்கிழமை காலை 6.00 மணிக்கு யாழ் மறை மாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை மற்றும் காலி மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி றேமன் விக்கிரமசிங்க ஆண்டகை இணைந்து நடத்தும் திருநாள் கூட்டுத் திருப்பலியுடன் நிறைவு பெறும்.

கடல்வழிப்போக்குவரத்து 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 5.00 மணியிலிருந்து பிற்பகல் 2.00 மணி வரை குறிகட்டுவான் நெடுந்தீவு இறங்கு துறையிலிருந்து நடைபெறும்.

யாழ்ப்பாணம் பஸ்தரிப்பு நிலையத்திலிருந்து 23 ஆம் திகதி காலை 3.30 மணியிலிருந்து இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பஸ் சேவைகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

இலங்கையிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் இத் திருவிழா திருப்பலியில் கலந்துகொள்ளவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கல்வாரிப் பூங்காவில் தவக்கால தியான வழிபாடுகள்

வவுனிக்குளத்தில் அமைந்துள்ள யாழ் மறை மாவட்ட தவக்கால யாத்திரைத் தலமான கல்வாரிப் பூங்காவில் சிலுவைப்பாதை தியானமும் திருப்பலியும் 17.02.2018 தொடக்கம் 17.03.2018 பிரதி சனிக்கிழமைகளில் காலை 9.00 மணி தொடக்கம் இடம்பெறும்.

17.02.2018 சனிக்கிழமை பொது வழிபாடும் 24.02.2018 சனிக்கிழமை கிளிநொச்சி, முல்லைத்தீவு மறைக்கோட்ட இறைமக்களும் 03.03.2018 சனிக்கிழமை இளவாலை மறைக்கோட்ட இறை மக்களும், 10.03.2018 சனிக்கிழமை தீவகம், பருத்தித்துறை மறைக்கோட்ட இறை மக்களும், 17.03.2018 சனிக்கிழமை யாழ் மறைக்கோட்ட இறைமக்களும் கலந்துகொண்டு வழிபாடுகளை சிறப்பிப்பார்கள்.

17.03.2018 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ் ஆயர் பேரருட் கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் திருப்பலி இடம்பெறும்.

யாத்திரை மேற்கொள்வோர் ஏ-9 வீதி வழியாகப் பயணிப்போர் மாங்குளம் சந்தி → துணுக்காய் வீதி → வன்னி விளாங்குளம் சந்தி →வவுனிக்குளம் வீதி ஊடாக கல்வாரிப்பூங்காவை அடையலாம்.

ஏ-32 வீதியால் பயணிப்போர் வெள்ளாங்குளம் சந்தி → துணுக்காய் வீதி → மல்லாவி → ஒட்டறுத்தகுளம் சந்தி → வவுனிக்குளம் வீதி வழியாக கல்வாரிப் பூங்காவை அடையலாம். தனிப்பட்ட முறையிலும் குழுக்களாகவும் வருகை தர விரும்புவோரும், மதிய உணவு அனுசரணைகள் தேவைப்படுவோரும் மல்லாவி பங்குத்தந்தை அருட்பணி T.குயின்சன் பெர்னாண்டோ அடிகளாருடன் தொடர்பு கொண்டு முன்னாயத்தங்களை மேற்கொள்ள முடியும் என அறிவுறுத்தப்படுகின்றனர்.

# புனித நாட்டிற்கான 08 நாள் தவக்காலத் திருப்பயணம் - 2018

யாழ். மறைமாவட்ட திருப்பயண செயற்குழு ஒழுங்கு செய்யும் புனித நாட்டிற்கான திருப்பயணம் வரலாற்று இயேசுவை ஆழமாக அறிந்து கொள்ள அரிய சந்தர்ப்பம் நம் மீட்பரான இயேசுக்கிறிஸ்து வரலாற்றில் மனிதனாகப் பிறந்து வாழ்ந்த இஸ்ராயேல் நாட்டிற்கு திருப்பயணம்செய்யவிரும்புவோருக்குயாழ். மறைமாவட்ட திருப்பயணக்குழு ஒழுங்கு செய்யும் அரிய சந்தர்ப்பம். யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டு மீண்டும் திரும்பும் வரை சகல பயண ஒழுங்குகளும் செய்யப்படும்.

இயேசுவின் வாழ்வோடு தொடர்பு பட்ட சகல இடங்களுக்கும் செல்லுதல். அனைத்து விளக்கங்களும் தமிழில் வழங்கப்படும். யாழ்ப்பாணத்திலிருந்து பல திருப்பயணங்களை வெற்றி கரமாக ஒழுங்கு செய்த திருப்பயணக்குழு இவ்வருடமும் புனித நாட்டிற்கு ஒழுங்கு செய்யும் திருப்பயணத்தில் இணைந்து பயன் பெறுங்கள்.

பங்குனி மாதம் 12 ஆம் திகதி தொடக்கம் 19 ஆம் திகதி வரையான பயணத்தில் இணைந்து கொள்ள விரும்பியவர்கள் மாசி மாதம் 05ம் திகதிக்குள் தொடர்பு கொள்ளவும். பயணத் தொகை: ஒருவருக்கு ரூபா 192,600/- மட்டுமே.

**மேலதிக விபரங்களுக்கு:**
**அருட்திரு போல் றொகான்**
**யாழ். மறைமாவட்ட திருப்பயண செயற்குழு**
**தொலைபேசி: 0773792255**

(உங்கள் பங்குக் குருக்கள் மூலமாகவும் அருட்திரு போல் றொகான் அவர்களுடன் தொடர்பு கொள்ள முடியும்.)

# சாட்டி சிந்தாத்திரை மாதா தவக்கால திருயாத்திரை நிகழ்வுகள்

சாட்டி சிந்தாத்திரை திருத்தலத்தில் தவக்கால திருயாத்திரை நிகழ்வுகளும், தியான வழிபாடுகளும் தவக்காலத்தின் சனிக்கிழமைகளில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை நடைபெறும். 17.02.2018 தீவக மறைக் கோட்ட இறைமக்களும், 24.02.2018 இளவாலை மறைக்கோட்ட இறைமக்களும், 03.03.2018 பருத்தித்துறை இறைமக்களும், 10.03.2018 யாழ்ப்பாண மறைக்கோட்ட இறைமக்களும், 17.03.2018 கிளி /முல்லை மறைக்கோட்ட இறைமக்களும் இந்நிகழ்வுகளில் கலந்து கொள்வர்.

# எமது சூழலை அச்சுறுத்தும் பொலித்தீன்

நாம் சுகதேகிகளாக உயிர் வாழ்வதற்கும், எமக்குள்ள உரிமைகளையெல்லாம் அனுபவிப்பதற்கும் ஆரோக்கியமான சூழல் அவசியமாகும்.


தேவைகளும், போட்டிகளும், பிரச்சினைகளும் உலகை சிக்கலானதாக மாற்றியமைத்திருக்கின்ற நிலையில் தீர்வுகள் மேற்கொள்வதில் பல வழிமுறைகள் கையாளப்படுகின்றன. போட்டி போட்டுக்கொண்டு நாடுகள் அபிவிருத்திச் செயற்பாட்டை மேற்கொள்வதினால் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்து அபிவிருத்தியடைந்தமை ஒருபுறமிருக்க, சூழலைப் புறக்கணித்தமையால் புவி வெப்பமடைதல், இயற்கை அனர்த்தங்கள், ஒளி இரசாயனப்புகார், ஓசோன்படை சிதைவடைதல் நிகழக் காரணமானது என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும். மனித நடவடிக்கைகளை கவனத்தில் எடுக்காமல்விட இயலாது என்பது பொருளாதார வளர்ச்சியுடன் சம்பந்தப்பட்ட அனைவரிடத்தும் தோன்றியுள்ளது. இந்த உணர்வைத் தெரிந்தோ தெரியாமலோ சூழலில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதனை மனித சமுதாயத்திற்கு உணர்த்த வேண்டியது அவசியமாகும்.

அந்த வகையில் பொலித்தீன் பாவனையும் முக்கியமானது. மனித தேவைக்கு பயன்படும் பொலித்தீன், பிளாஸ்ரிக் பொருட்கள் இலகுவாகவும், மலிவாகவும் கிடைப்பதனால் மனித தேவைகளுக்கு அதிகமாக பயன்பட்டிருந்த போதிலும் இன்று அவற்றை விட்டு எம்மால் வாழமுடியாத நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றோம்.

பொலித்தீன் பல்லின பயன்பாட்டு தன்மையுடையதாக எம் வாழ்வுடன் இணைந்துள்ளது. நாம் அன்றாடம் பயன்படுத்தும் அநேகமான பொருட்களை திரும்பத் திரும்ப பயன்படுத்தலாம் அல்லது ஒன்றின் பலன் முடிவடைந்த பின் வேறொன்றிற்குப் பயன்படுத்தலாம் இல்லையெனில் மீள் உற்பத்திக்குப் பயன்படுத்தலாம்.

ஆனால் இன்று பயன்படுத்திவிட்டு தூக்கியெறியும் கலாசாரம் (use and throw culture) எம்மிடையே உருவாகியுள்ளது. அபிவிருத்தி அடைந்த நாடுகளைப் போன்று நன்கு திட்டமிட்ட மீளுற்பத்திச் செயற்பாடுகள் இடம் பெறாமையே பொலித்தீனால் ஏற்படும் சவால்களை எதிர்கொள்ள முடியாமைக்கான முக்கிய காரணமாகும்.

பொலித்தீன் மண்ணுடன் மண்ணாக கலக்க முடியாது, உக்காது. நீண்ட காலம் மண்ணிலே காணப்பட்டு தாவர வளர்ச்சியை நேரடியாக கட்டுப்படுத்துகின்றது.



இதனால் வேர் ஊடுருவலும், நீர், கனியுப்பு அகத்துறிஞ்சலும் கட்டுப்படுத்தப்படுகின்றது. மண்ணினூடாக நீர் பூமிக்கடியில் கசிந்து செல்வதை பொலித்தீன் படை தடுக்கிறது. இதனால் கிணறுகள் ஊற்றுக்கள் நீர் கிடைக்காது வற்றுகின்றது.

பொலித்தீன் பைகளில் கட்டி வைக்கப்பட்ட குப்பைகள் குறிப்பிட்ட இடத்தில் சேமிக்கின்றபோது உக்கக்கூடிய பொருட்களும் நீண்ட காலத்திற்கு உக்காமலிருந்து துர்நாற்றம் வீசுதல், வளி மாசடைதல், நோய்

**அருட்சகோதரி றோமலா அன்ரனி (HC)**

பரவல் என்பன நிகழ்கின்றன.

பொலித்தீன் கழிவுநீர் வடிந்தோடும் துவாரங்களையும், வடிகால் அமைப்புக்களையும் அடைத்து நீர் வடிந்து போக முடியாமல் கழிவு நீரும், மழை நீரும் தேங்கி வெள்ள அபாயம் ஏற்படுவதுடன் நோய்க்கிருமிகள் பெருகவும் வாய்ப்பு ஏற்படுகிறது.

பொலித்தீன் பைகளில் நீர் நிறைந்து நுளம்புகள் பெருக்கமடைகின்றன. இதனால் டெங்கு, மலேரியா, யானைக்கால், மூளைக்காய்ச்சல் என்பன வேகமாகப் பரவுகின்றன.

பொலித்தீனுடன் வீசப்படும் உணவுகளை உயிரினங்கள் உட்கொள்வதனால் சமிபாடடையாத நிலையில் அவை மடிந்து போகின்றன.

அபிவிருத்தி அடைந்த நாடுகள் பொலித்தீன் பிரச்சினையினை தீர்ப்பதில் தகுந்த நடவடிக்கையினைக் கையாண்டு வெற்றி கண்டுள்ளன.

- குப்பைகளைப் பிரித்தெடுத்த நிலையிலேயே அகத்துறிஞ்சுகின்றன. இதனால் இதர கழிவுகள் மீளுற்பத்திற்கு இலகுவாக பயன்படுத்த முடிகின்றது.
- பிரித்து கழிவுகளை அகற்றாதவர்களுக்கு முதலில் எழுத்து மூலமான அறிவுறுத்தல் வழங்கப்படுகின்றது. இச்செயல் தொடருமானால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.
- உயரினங்களுக்கேற்ற ஆரோக்கியமான சுற்றாடல், சுகவாழ்வுக்கேற்ற சுகாதாரம் என்பன பற்றிய அறிவையும், உணர்வையும் மக்கள் கொண்டிருக்கின்றனர்.


இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் வறுமை, வேலையின்மை, போஷாக்கின்மை, அதிகரித்த சனத்தொகை என்பன காணப்படுவதைப் போன்று பெருகிவரும் குப்பை கூழங்களும் பாரிய பிரச்சினையாக மாறியுள்ளது. ஆனால் இங்கு மக்கள் இதனால் ஏற்படும் ஆபத்துக்களை அறியாதிருக்கின்றனர்.

- மக்களின் மனப்பாங்கை மாற்ற உணர்வு பூர்வமாகச் சிந்திக்கத்தக்க வகையில் விழிப்பூட்டல் கருத்தரங்குகள் நடத்த வேண்டும்.
- நம் நாட்டு மக்கள் மதப்பற்று, இனப்பற்று, பதவிப்பற்று கொண்டிருந்த போதிலும் சுற்றாடலில் பற்றுக் கொண்டிருக்கவில்லை. இதுவே சுற்றாடல் மாசடையக் காரணமாகின்றது.
- இப்பிரச்சினைக்கு தீர்வாக நெகிழும் தன்மையுடைய பொலித்தீன் உற்பத்தி அறிமுகமாயுள்ளது. இவை வெப்பக் காற்றுபடுகின்றபோது நெகிழ்ச்சியடைந்து அவற்றினுள் உள்ள பதார்த்தங்கள் எறும்புகளை கவருவதால் அவை பொலித்தீன்களை பிரிகையடையச் செய்கின்றன.

  கழிவுகளை வேறு பிரித்து அகற்றுவதால் மீள் உற்பத்தி செயன்முறைக்கு பயன்படுத்த முடியும்.
- ஊடகங்கள் மூலம் மக்களுக்கு பொலித்தீன் பாவிப்பதன் மூலம் எற்படும் விளைவுகளையும் கட்டுப்படுத்தும் முறைகளையும் அறிவுறுத்தல்.
- முடிந்தவரை இயற்கை நார்கள், புற்கள், சணல், துணி, மூங்கில் போன்றவற்றினாலான பைகள், உடைகள் என்பவற்றை பயன்படுத்தல்.
- உணவுச்சாலையில் உணவு பரிமாறவும், எடுத்துச் செல்லவும் மருத்துவ குணம் மிக்க வாழையிலை, தாமரை இலை, வாழை மடல் என்பவற்றைப் பயன்படுத்தல்.
- பாடசாலை மாணவர்கள் வேலைக்குச் செல்பவர்கள் தமது உணவுகளை உணவுப் பெட்டிகளில் எடுத்துச் செல்லும் வழக்கத்தை மேற்கொள்ளல்.
- வியாபார நிலையங்களில் காகித பைகளை பயன்படுத்துவதால் அதனைத் தயாரிப்பவர்களுக்கு வருமானம் தரும் குடிசைக் கைத்தொழிலாகவும் அமைகின்றது.

இன்று பொலித்தீன் பிரச்சினையை தீர்க்க நாம் ஒவ்வொருவரும் அக்கறையுடன் செயற்படுவோமானால் பொலித்தீனினால் சூழலுக்கு ஏற்படும் சவாலை நாம் வெற்றி கொள்ளலாம்.

நம் எதிர்கால சந்ததியினருக்கு மாசற்ற சூழலை சொத்தாக கொடுத்துச் செல்வோம்.



# இயற்கையோடு இணைந்து...

சுற்றுப்புறம் என்பதை சூழல் என்று சொல்லலாம். சூழல் என்பதை இயற்கை உலகு என்றும் அழைக்கலாம். நான் இங்கு சொல்ல வரும் விடயம் சுற்றுப்புறவியல் / சூழலியல் (Ecology) ஆகும். சுற்றுப்புறவியல் அல்லது சூழலியல் என்பது உயிரினங்கள் இணைந்து வாழும் சுற்றுச்சூழல் அல்லது இயற்கை உலகு பற்றிய கல்வியாகும். இங்கே இயற்கை வளங்களாக விலங்கியல் உலகு (Fauna), தாவரவியல் உலகு (Flora), நீர்வளம், நிலவளம், காற்று, கனிமவளங்கள் என்பன சுற்றுப்புறவியலின் பிரதான உள்ளடக்கங்கள் ஆகும். அதாவது உயிரினங்களுக்கும் அவற்றின் பௌதீக மண்டலத்திற்கும் இடையிலான இன்றியமையாத உறவு நிலையே சுற்றுப்புறவியலின் பேசுபொருளாகும்.

உறவு நிலை என்று கூறும்போது பிரதானமாக இங்கே நான் பேசவிரும்புவது மனிதனுக்கும் அவனது உயிரியல் மண்டலத்திற்கும் இடையிலான உறவுநிலை பற்றி மனித உறவுகளுக்கு அப்பால் இன்று மனிதன் இயற்கையுடனான அவனது உறவுநிலை பற்றிச் சிந்திக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

இயற்கையின் சமநிலையில் இன்று ஏற்பட்டுள்ள பாரிய மாற்றங்களே சமகால மனிதனை சுற்றுப்புறவியல் பற்றி அவசர அவசரமாக சிந்திக்க நிர்ப்பந்தித்துள்ளது. தொழில்நுட்பவியலுலகில் மனிதனின் சீற்றத்தை விட இயற்கையின் சீற்றம் அதிகரித்துச் செல்கின்றதை நாம் வெளிப்படையாக உணரமுடிகின்றது. சீரற்ற காலநிலை அதனால் ஏற்படும் கனமழை, வெள்ளப்பெருக்கு, அதிகூடிய வெப்பநிலை, அதனால் உருகி வரும் பனிமலைகள் கடலின் நீர்மட்டத்தின் அதிகரிப்பும் அதனால் பல கிராமங்கள் நகரங்கள் ஏன் சில நாடுகளே நீருக்குள் மூழ்கும் அபாயநிலை, சுனாமி என்று இயற்கையின் அழிவு பற்றி அடுக்கிக்கொண்டு செல்கையில் நெஞ்சம் பதறுகின்றது. இவற்றிற்கு காரணம் யார்? நாங்கள் ஒவ்வொருவருமே.

ஒப்பீட்டளவில் இன்று உலகின் சனத்தொகை திடீரென அதிகரித்துள்ளது என்பது உண்மைதான். அதனால் மனிதன் தனது தேவைகளை பூர்த்தி செய்ய இயற்கை வளங்களை பயன்படுத்தவேண்டிய தேவையும் அவனுக்குள்ளது. எனவே காடுகளை அழித்து குடியேறுகின்றான். தொழிற்சாலைகளை அமைக்கின்றான். மனிதனுக்கு இவ்வாறான தேவைகள் இருப்பினும் இத்தேவைகளைப் பூர்த்தி செய்யும் தருணத்தில் இயற்கை உலகு மட்டில் அவன் எவ்வளவு தூரம் பொறுப்போடு செயற்படுகின்றான் என்பதும் அழிக்கப்படும் காடுகளை மற்றும் பயன்படுத்தப்படும் இயற்கை வளங்களை மீளமைப்பதற்கும் வரவிருக்கும் எதிர்கால சந்ததியினருக்காக அவற்றைப் பாதுகாத்து வைக்கவும் விளைகின்றான் என்பதும் பெரும் கேள்விக்குறியாகவே இருக்கின்றது.

இன்று மரங்கள் அழிக்கப்படும் வீதம் நடப்படும் வீதத்தோடு ஒப்பீடும் போது அழிக்கப்படுகின்ற மரங்களின் எண்ணிக்கை அதிகமாகம். காபனீரொட்டை. உள்வாங்கும் மரங்கள் அருகிப்போகும் அதேவேளையில் அதிகூடிய வாகனங்கள், இயந்திரங்களின் பாவனை மற்றும் அதிகரித்து வரும் தொழிற்சாலைகள் காரணமாக காபனீரொட்சைட்டை வெளிவிடும் அளவு அதிகரித்துள்ளது.

சீரற்றகாலநிலை அதிகூடிய வெப்பநிலை என்பனவற்றிற்கு இத்தகைய நடவடிக்கைகளும் பிரதான காரணங்களாக அமைகின்றன. இன்று வீடுகளிலும் அலுவலகங்களிலும் ஏன் ஆலயங்களிலும்கூட குளிரூட்டிகள் பொருத்த எத்தனிக்கும் இந்தத் தலைமுறைக்கு மரங்கள் நடுவது பற்றி எள்ளளவும் எண்ணாமல் இருப்பது வேதனைக்குரியது.

இங்கே எனது சூழலியல் விரிவுரையாளர் சொன்ன அழகான கூற்று ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். "இயற்கையை நீ அன்பு செய்தால் இயற்கை உன்னை அன்பு செய்யும் மாறாக இயற்கைக்கு நீ தீங்கு செய்தால் பதிலுக்கு இயற்கையும் உனக்கு தீங்கிழைக்க ஒருபோதும் தயக்கம் காட்டாது". இயற்கையின் சீற்றத்தால் மனிதன் சந்திக்கும் ஆபத்தானது பேராபத்தாக அமையும் என்பதில் எதுவித ஐயப்பாடும் இல்லை.

எமது பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் காலத்தின் தேவை கருதி சுற்றுப்புறவியல் பற்றிய 'Laudato Si' என்னும் சுற்றுமடலை வெளியிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இயற்கையின் அழகு பற்றியும் அதை பாதுகாக்க வேண்டிய தேவை பற்றியும் அவர் பேசுகின்ற கருத்துக்களை உலகத்தார் அனைவரும் இன, மத பேதமின்றி வாசித்தறிய வேண்டியது அவசியமாகும். அதிலே அவர் இயற்கை உலகை அதாவது நாம் வாழும் சூழலை எமது இல்லம் (Our Home) என்று உருவகிப்பதும் இயற்கையுடனான உறவை ஒரு இல்ல உறவு போன்று அழகானதாகவும், ஆரோக்கியமானதாகவும் இருக்க வேண்டும் என்று ஒப்பிட்டுப் பேசுவதும் அழகான விடயங்களே. மேலும் அவர் இயற்கை உலகில் ஒவ்வொரு உயிரினமும் ஒன்றில் ஒன்று தங்கி வாழுகின்றன (Interdependance) என்பதை ஒருபோதும் நாம் மறந்து விடக்கூடாது என்றும் அங்கே வலியுறுத்துகின்றார். இவ்விடத்தில் அன்று செவ்விந்திய தலைவரான சியாட்டில், செவ்விந்திய தேசத்தை அமெரிக்க குடியரசு விலைபேசிய போது அந்நேரத்தில் அமெரிக்க குடியரசின் அதிபரான பிராங்கிளின் பியர்ஸ் (Franklin Pierce) என்பவருக்கு எழுதிய கடிதத்தை ஒருகணம் நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

வெள்ளையர்களால் எங்கள் வாழ்வு முறையைப் புரிந்து கொள்ள முடியாது. பூமி மனிதனுக்கு உரிமையானது அல்ல. மனிதன் பூமிக்கு உரிமையானவன். பூமிக்கு எது நேர்ந்தாலும் அது பூமியின் பிள்ளைகளுக்கும் நேரிடும். வானத்தையோ, பூமியையோ விற்கவோ வாங்கவோ எவ்வாறு இயலும்? அந்த எண்ணமே எங்களுக்குப் புதிரானது.

விலங்குகள் இல்லாமல் மனிதன் எப்படி வாழ்வான்? எல்லா விலங்குகளும் இந்த பூமியில் இருந்து மறைந்து போய் விடுமானால் பிசாசுத் தனிமையில் மனிதன் இறந்து போய்விடுவான். விலங்குகளுக்கு நேர்வது நாளை மனிதனுக்கு நேரிடும். எல்லாம் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டவையே.

நீரின் முணுமுணுப்பு எம் தந்தையின் தந்தையினுடைய குரல். எங்கள் காலடியில் உள்ள நிலம் எம் மூதாதையரின் சாம்பல். இதை நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு கற்பிக்க வேண்டும். இந்தப் பூமி எங்களின் தாய் என நாங்கள் நம்புவதை உங்கள் குழந்தைகளுக்கு கற்றுக்கொடுங்கள்.

நதிகள் எங்கள் சகோதரர்கள். அவர்கள் எங்கள் தாகத்தை தீர்க்கின்றார்கள். எங்கள் படகுகளை சுமக்கின்றார்கள். எங்கள் குழந்தைகளின் பசியாற்றுகின்றார்கள். நாங்கள் உங்களுக்கு எமது நிலத்தை விற்றால் நதிகள் எங்களுக்கும், உங்களுக்குமான சகோதரர்கள் என்பது உங்களுக்கு நினைவிருக்க வேண்டும். அதை உங்கள் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுக்கவும் வேண்டும். அது மட்டுமல்லாமல் நீங்கள் எந்தவொரு சகோதரனிடமும் காட்டும் கருணையை நதிகளிடமும் காட்ட வேண்டும்.

வெள்ளை மனிதன் உருவாக்கிய நகரங்களில் அமைதியே இல்லை. வசந்த காலத்து இலைகள் உதிர்வதை கேட்கவோ பூச்சிகள் தங்கள் சிறகுகளை உரசிக்கொள்ளும் ஓசையை அறியவோ சாத்தியமில்லை. நகரங்களின் குழப்பமான ஓசைகள் செவியை அவமதிப்பதாக தோன்றுகின்றது.

சிவப்பு மனிதனுக்கு காற்று மிகவும் மதிப்புடையது. ஏனென்றால் எல்லா உயிர்களும் பகிர்ந்து கொள்வது ஒரே சுவாசத்தைத்தான். விலங்கும் மரமும் ஒரே சுவாசத்தைத்தான் சுவாசிக்கின்றார்கள். வெள்ளை மனிதன் தான் சுவாசிக்கும் காற்றை அறிந்து கொண்டதாகத் தெரியவில்லை.

பரிசுத்த தந்தையோடும், செவ்விந்தியத் தலைவர் சியாட்டிலோடும் இணைந்து கொள்வோம். இயற்கையை அன்பு செய்வோம். இயல்பு நிலைக்குத் திரும்புவோம்.


அருட்பணி T.ரவிராஜ்

# நாம் செபிக்கும்போது நடப்பதென்ன?

அருட்பணி
மா.றேஜிஸ் இராசநாயகம்

நான் விண்ணகத்துக்குச் சென்றதாக ஒரு கனவு கண்டேன். வானதூதர் ஒருவர் அவ்விடத்தை எனக்குச் சுற்றிக் காண்பித்தார். நாம் இருவரும் ஒரு பெரிய அலவலகத்துட் சென்றோம். அங்கு ஏராளமான வான தூதர்கள் இருந்தனர். எனக்கு வழி காட்டிய வானதூதர் முதலாவது பகுதியில் சற்றுத் தரித்து நின்று, "இதுதான் விண்ணப்பங்களை ஏற்கும் பகுதி. செபத்தில் இறைவனிடம் செய்யப்படும் வேண்டுதல்கள் அனைத்தும் இங்குதான் ஏற்கப்படுகின்றன" என்று கூறினார்.

அந்தப் பகுதியை நான் சுற்றிப் பார்த்த போது அங்கு அநேக வானதூதர்கள் பரபரப்பாக உலகின் எல்லாப் பாகங்களிலிருந்தும் பெரிய தாள்களிலும், துண்டுகளிலும் மக்கள் எழுதிய பல்வேறு வேண்டுதல்களை வகைப்படுத்திக் கொண்டிருந்தனர்.



அடுத்து நாம் ஒரு நீண்ட கூடத்தினூடாக இரண்டாவது பகுதிக்கு வந்தோம்.

வானதூதர் என்னிடம் "இது தான் பொதி செய்து அனுப்பும் பகுதி. உல மக்கள் வேண்டிக் கொண்ட அருட்கொடைகளும் ஆசீர்வாதங்களும் தயார் செய்யப்பட்டு அவரவர் கேட்டுக்கொண்டபடி உலகில் வாழும் மக்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன" என்று கூறினார். அங்கும் சுறுசுறுப்பாக வேலைகள் நடைபெறுவதை அவதானித்தேன். இப்பகுதியிலும் அநேக வானதூதர்கள் கடுமையாக வேலை செய்து கொண்டிருந்தனர். ஏனெனில் அவ்வளவு வேண்டுதல்கள் பூமியில் வாழும் மக்களால் செய்யப்பட்டிருந்தன. பூமிக்கு அவற்றை அனுப்புவதற்காக பொதி செய்துகொண்டிருந்தனர்.

ஈற்றில் அந்த நீண்ட கூடத்தின் முடிவில் இருந்த ஒரு சிறிய பகுதியின் வாயிலருகே நின்று உள்ளே பார்த்தோம். ஒரேயொரு வானதூதர் மட்டும் வேலையில்லாமல் அங்கு உட்கார்ந்திருந்தது எனக்கு ஆச்சரியத்தை தந்தது. "இதுதான் பெற்றுக்கொண்டவற்றுக்கு நன்றி தெரிவிக்கும் பகுதி" என்று வானதூதர் அமைதியாகக் கூறினார். அவர் சற்று சங்கடப்படுவதாகத் தெரிந்தது "ஏன் இங்கு ஒரு வேலையும் நடைபெறவில்லை" என்று கேட்டேன்.

"இது கவலைக் குரியது. தாம் வேண்டிய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டபின் வெகுசிலரே தமக்குக் கிடைத்தவற்றுக்கு நன்றியாக பதில் அனுப்புகின்றனர்" என்று வானதூதர் பெருமூச்சுடன் கூறினார். "கடவுளுடைய ஆசீர்வாதங்களுக்கு எவ்வாறு பதிலளிப்பது" என்று கேட்டேன்.

"அது மிகவும் எளிது. ஆண்டவரே உமக்கு நன்றி" என்று கூறுங்கள். அவ்வளவு தான் " என்றார் வானதூதர். "எந்த ஆசீர்வாதங்களுக்கு நன்றிகூற வேண்டும்" என்று நான் கேட்டேன்.

"உங்கள் குளிரூட்டியில் உணவிருந்தால், அணிவதற்கு ஓர் உடையிருந்தால், தங்குவதற்கு ஓர் இருப்பிடம், படுப்பதற்கு ஓர் இடம் இருந்தால் உலகில் வாழும் 75 வீதமானவர்களைவிட நீங்கள் பணக்காரர்கள் உங்களுக்கு வங்கியில் வைப்பும், பணப்பையில் பணமும், மேலதிகமாக சில்லறையும் இருந்தால் உலகிலுள்ள 8 வீதமான பெரும் பணக்காரர்களுள் நீங்களும் ஒருவர்.

இதை உங்கள் சொந்தக் கணனியில் எடுக்கக் கூடுமாயிருந்தால் அத்தகைய வசதியுள்ள 1 வீதமானவர்களில் நீங்களும் ஒருவர்.

"இன்று காலையில் நோய்நொடியின்றி உடல் நலமுள்ள வர்களாய் நீங்கள் எழுந்திருந்தீர்களானால், இன்றைக்கு உயிர்பிழைத்தே இருக்க முடியாத எத்தனையோ பேரைவிட நீங்கள் எவ்வளவோ பாக்கியம் செய்தவர்கள். போரினால் ஏற்படும் அச்சத்தையும், சிறையிருப்பின் தனிமையையும், சித்திரவதையின் வேதனையையும், பசின் கொடுமையையும் ஒருபோதும் அனுபவித்திராவிட்டால் உலகிலுள்ள 700 மில்லியன் மக்களைவிட நீங்கள் முன்னணியில் உள்ளவர்கள்.

துன்புறுத்தல், கைது, சித்திரவதை ஆகியவற்றின் அச்சமில்லாமல் ஆலயத்தில் வழிபட முடியுமானால் உலகிலுள்ள 300 கோடி மக்களைவிட நீங்கள் பேறுபெற்றவர்கள். அவர்கள் உங்களைப் பாரத்துப் பொறாமைப்படலாம்.

உங்கள் பெற்றோர் இன்னும் உயிருடனிருந்து அவர்கள் இன்னும் தம்பதியினராக வாழ்ந்தால் நீங்கள் அபூர்வமானவர்கள்.

உங்களால் தலை நிமிர்ந்து புன்னகை செய்ய முடியுமாயின் நீங்கள் சாதாரணமானவர்களல்ல. சந்தேகத்திலும் அவநம்பிக்கையிலும் இருப்பவர்களுக்கு நீங்கள் தனிச் சிறப்பு உடையவர்கள்.

சரி, இப்போது என்ன? நான் எப்படி ஆரம்பிப்பது? இந்த செய்தியை உங்களால் வாசிக்க முடிந்தால் இரு மடங்கு ஆசீர்வாதம் கிடைத்துள்ளது. உலகில் எழுத்து வாசிப்பற்ற 200 கோடி மக்களைவிட நீங்கள் பேறுபெற்றவர்கள்.

இன்றைய தினத்தை சந்தோசமாகக் கழியுங்கள். உங்கள் ஆசீர்வாதங்களை நினைவுகூருங்கள். எல்லோரும் எவ்வளவு பேறுபெற்றவர்கள் என்பதை நினைவூட்ட இதை அவர்களுக்கும் காட்டுங்கள்.

# ‘தூயவர்’ என்பவர் இறைவன் மட்டுமே

**மனிதராகப் பிறந்து படிப்படியாக ஆன்மீகத்தில் வளர்ச்சி பெற்று உன்னத நிலையடைந்தவர்களைத் திருச்சபை அர்ச்சியசிஷ்டர்/புனிதர் என்று பகிரங்கமாகப் பிரகடனப்படுத்தியது. றொபேட் டீ நொபிலி காலம் (1557 - 1656) முதல் 2ஆம் வத்திக்கான் சங்கக் காலம் (1962 - 65) வரையும் அர்ச்சியசிஷ்டர் என்றும், 2ஆம் வத்திக்கான் சங்கக் காலம் முதல் இன்று வரை புனிதர் என்றும் அழைக்கப்பட்டவர்களை, அண்மைக்காலமாகச் சிலர் தூயவர் என அழைக்கின்றனர். இது பொருத்தமானதா? அல்லது ‘தூய’ என்னும் பெயரடை இறைவனுக்கு மட்டும் உரியதா? இது பற்றி நோக்குகின்றது இக்கட்டுரை.**



அருட்பணி. ஞா. பிலேந்திரன்
யாழ். பல்கலைக்கழகம்

புனித / தூய இவை இரண்டும் தமிழ் இலக்கணத்தில் பெயரடைகளாகும். அதாவது பெயர்ச்சொல்லின் தன்மையை எடுத்துரைக்கும் பதங்களாகும். புனித யோவான் / தூய யோவான் - இவற்றுள் எது பொருத்தமானது? புனித யோசவ் வாஸ் / தூய யோசவ் வாஸ் - இவற்றுள் எது பொருத்தமானது? புனித பவுல் / தூய பவுல்- இவற்றுள் எது பொருத்தமானது? புனித / தூய இவ்விரண்டு பெயரடைக்குமிடையே கருத்து வேறுபாடுகள் உண்டா?

அண்மைக் காலங்களாக இந்த இரண்டு பதங்களையும், அவற்றின் சரியான பயன்பாடு புரியாத நிலையில் பயன்படுத்துவதன் காரணமாக தென் இந்தியாவிலும் இலங்கையிலும் தமிழ்ப் பேசும் சில கத்தோலிக்கர் மத்தியில் குழப்ப நிலையும் இப்பதங்களின் பாவனையில் தெளிவற்ற தன்மையும் நிலவி வருகின்றது. இதற்குத் தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் செயற்படும் சில தமிழ்க் கத்தோலிக்க ஊடகங்களுக்கும் பொறுப்புண்டு. இப்பின்னணியில் புனித/தூய என்னும் பெயரடைகள் பற்றிய தெளிவான விளக்கத்தையும், என்ன பெயர்ச் சொல்லுடன் என்ன பெயரடை பயன்படுத்தப்படுவது இறையியல், விவிலிய, வரலாற்று, இலக்கண ரீதியில் பொருத்தமானது என்பதைத் தெளிவுபடுத்துவதும் காலத்தின் தேவையாகும். முக்கியமாக இச்சிக்கல் கத்தோலிக்க திருச்சபையின் பாரம்பரியத்தின் பின்னணியில் நோக்கப்படுவதன் மூலமே தெளிவான விளக்கத்தைப் பெறமுடியும்.

## கத்தோலிக்கத்தின் அறிமுகம்

16 ஆம் நூற்றாண்டின் முற் கூற்றில் தமிழ்ப்பேசும் மக்களுக்கு கத்தோலிக்கம் அறிமுகமானபோது இலத்தீன், போர்த்துக்கேயம் ஆகிய மொழிகளிலிருந்து தேவையான செபங்கள், ஒழுக்கக் கோட்பாட்டு விதிமுறைகள், புனிதர் வரலாறுகள் தமிழில்மொழிபெயர்க்கப்பட்டன. பல மட்டுப்பாடுகள் மத்தியிலேயே ஆரம்பகாலங்களில் மேற்கொள்ளப்பட்ட மொழிபெயர்ப்புக்கள் செம்மை பெற்றவையாக அமையவில்லை. இதனால் மொழி வளர்ச்சியையும் மக்களின் புரியும் திறனையும் கருத்திற்கொண்டு ஒரே விடயம் காலத்தின் தேவைக்கேற்ப மீண்டும், மீண்டும் மொழி பெயர்ப்புச் செய்யும் தேவை ஏற்பட்டது. திருவிவிலியம் மட்டும் இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் 1665 ஆம் ஆண்டு முதல் 1995 ஆம் ஆண்டு வரையும் 23 முறைகள் மொழி பெயர்ப்புச் செய்யப்பட்டுள்து. மொழிபெயர்ப்பு மேலும் சிறப்பாகவும் செம்மையாகவும் அமையும் பொருட்டே ஒவ்வொரு முறையும் அவை மேற்கொள்ளப்பட்டன.

இக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட மொழி பெயர்ப்பின்போது இரண்டு விடயங்கள் முக்கியமாகக் கருத்திற்கொள்ளப்பட்டன.

1) இலத்தீன் அல்லது போர்த்துக்கேய பதம் குறித்து நிற்கும் பதத்தின் சரியான பொருளைக் குறிக்கும் தமிழ்ப் பதத்தை இனம் காண்பது. ஆரம்பத்தில் மொழி பெயர்ப்பின்போது இணையான தமிழ்ப் பதம் கிடையாதபோது தமிழ்ப்படுத்தப்பட்ட போர்துக்கேயப் பதங்களே பயன்படுத்தப்பட்டன. (எ+டு) வவுத்தீசிமு - ஞானஸ்நானம் - திருமுழுக்கு; சாந்திசிமோ - சக்கிமெந்து - நற்கருணை.

2) மேலும் அக்காலத்தில் தமிழில் மணிப்பிரவாள நடை செல்வாக்குப் பெற்றிருந்தது. அம்மொழி நடையின் செல்வாக்கிலிருந்து விடுபட பொருத்தமான தமிழ்ப் பதத்தை இனம் காண்பதில் பல சவால்கள் எதிர்நோக்கப்பட்டன. இதனாலேயே போர்த்துக்கேயர் இலங்கையில் கத்தோலிக்க மறையைப் பரப்பிய காலம் முதல் இற்றைவரை மொழிபெயர்ப்பில் தொடர்ச்சியான வளர்ச்சி நிலை காணப்படுகின்றது. 1995 இல் இடம்பெற்ற பொது விவிலிய மொழிபெயர்ப்பு இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு. இப்பின்னணியில் புனித / தூய என்னும் பதங்களின் பாவனை பற்றி நோக்கலாம்.

மொழிபெயர்ப்பில் காணப்பட்ட ஏதோ குறைபாட்டை நிவர்த்தி செய்யவே மறு மொழி பெயர்ப்பு மேற்கொள்ளப்பட்டது. புனித என்பது திருப்திகரமான, கலப்பற்ற தமிழ்ப் பதமாகும். இதனை விடுத்து ‘தூய’ என்னும் பதத்தைப் பயன்படுத்துவதற்குக் காரணங்கள் உள்ளதாகத் தென்படவில்லை.

## மொழிபெயர்ப்பு படி நிலை

தமிழில் முதன் முதலில் மொழி பெயர்க்கப்பட்ட ‘கார்த்தில்லா’(1554) ஏட்டின்படி **அர்ச்சியசிஷ்டர்/புனிதர்** என்பதைக் குறிப்பதற்கு “புண்ணியவாளர்” என்னும் பதமே பயன்படுத்தப்பட்டது. (எ+டு) ‘புண்ணியவாளனான பேதுரு’, ‘புண்ணியவாளனான அந்திரேயா’. மேலும், தமிழ்க் கிறிஸ்தவ மொழிபெயர்ப்பின் முக்கிய முன்னோடி எனக் கொள்ளக்கூடிய கென்றிக் கென்றிக்கஸ் அடிகள் **‘சுத்தவாளர்’** என்னும் பதத்தை பயன்படுத்தியுள்ளாார். அதனைத் தொடர்ந்து **‘சாந்த’ ‘சம்’** சம்பத்திரிசியார், சம்பேதுரு, சம் பாவிலு, சந்தியோகுமாயோர், சந்தானாள் என்னும் பதங்கள் பயன்படுத்தப்பட்டன.

சமஸ்கிருத மொழியை ஆழமாகக் கற்று, மணிப்பிரவாள நடையில் நூல்களை ஆக்கிய றொபேட் டீ நொபிலி அடிகள் ‘அர்ச்சியசிஷ்ட’ என்னும் பதத்தையும், யாக்கோமே கொன்சால்வெஸ் அடிகள் (1676-1742) ‘ஆராதிஷ்ட’, ‘தா்மிஷ்ட’ என்னும் பதங்களையும் பயன்படுத்தினர். ‘அர்ச்சியசிஷ்ட’ என்னும் பதமே இரண்டாம் வத்திக்கான் சாங்கம் வரையும் பயன்படுத்தப்பட்டது.

இரண்டாம் வத்திக்கான் சங்க அமர்வுகளின் பின் ஏற்பட்ட மாற்றங்களிலொன்றாகவும் கலப்பற்ற தமிழ்ப் பதமாகவும் காணப்படும் **‘புனித’** என்னும் பதம் பயன்படுத்தப்படுகின்றது. இற்றைவரையும் இப்பதமே பயன்படுத்தப்படுகின்றது. கடந்த சில காலங்களாகவே மிகக் குறைந்த எண்ணிக்கையினரால் **‘தூய’** என்னும் பதம் பயன்படுத்தப்படுகிறது.

## பொது விவிலிய மொழிபெயர்ப்பில் ‘தூய’ என்னும் பதம்

1995 இல் மேற்கொள்ளப்பட்ட புதிய பொது விவிலிய மொழிபெயர்ப்பில் தந்தையாகிய இறைவனையும் தூய ஆவியையும் குறிக்க 48 இடங்களில் ‘தூய’ என்னும் பெயரடை பயன்படுத்தப்பட்டுள்ளது. பொது விவிலிய மொழி பெயர்ப்பு 35 இற்கும் அதிகமான விவிலிய அறிஞர்களையும், 50 இற்கும் அதிகமான தமிழ் அறிஞர்களையும் உள்ளடக்கிய உயர்மட்டக் குழுவினால் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டுள்ளது என்பது இங்கு கருத்திற் கொள்ளப்படவேண்டியது. இதன்படி ‘தூய’ என்னும் பெயரடை இறைவனுக்கு மட்டுமே உரியது என்பது தெளிவானதே. இதனை இறைவனின் படைப்பாகிய மனிதருக்குப் பயன்படுத்துவது எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாதது.

## பூசைப் புத்தகத்தில் (Roman Missal) புனித / தூய என்னும் பதங்கள்

இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கத்தின் ஆணைப்படி திருத்தி அமைக்கப் பெற்றுதிருத்தந்தைஆறாம்சின்னப்பரின்அதிகாரத்துடன், தமிழக இறைபணிக் குழுவினால் தமிழாக்கம் செய்யப்பெற்று, தமிழக ஆயர்களின் அங்கீகாரத்துடன் (05.02.1978 இல்) தமிழ்நாடு விவிலிய, மறைக்கல்வி, திருவழிபாட்டு, திண்டிவனம் நடுநிலையத்தில் 1979 இல் வெளியிடப்பட்டது. இந்தப் பூசைப் புத்தகமே இலங்கையிலும் பயன்படுத்தப்படுகின்றது. யாழ்ப்பாணம், மன்னார், திருமலை, மட்டுநகர் ஆயர்கள் தமிழ்நாடு ஆயர் மன்றத்தின் அனுமதிபெற்று (01.09.1989 இல்) இந்த பூசைப் புத்தகத்தை இலங்கையிலும் மீள் பதிப்புச் செய்துள்ளனர். இப்பூசைப் புத்தகம் மூன்று படிவங்களாக திருத்தம் பெற்றதோடு, பல மீள் பதிப்புக்களையும் கண்டுள்ளது. 2017 இல் இதன் மூன்றாம் படிவம் வெளியிடப்பட்டுள்ளது. இது வரையும் வெளிவந்த எந்தப் பதிப்பிலும் புனிதா்களைக் குறிக்க ‘தூய’ என்னும் பதம் எங்கும் இடம்பெறவில்லை என்பது கருத்திற்கொள்ளப்பட வேண்டும்.

இந்தப் புத்தகத்தில் வரும் செபங்களில் திரித்துவத்தைக் குறிக்க மட்டுமே ‘தூய’ என்னும் பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது. ‘தூய ஆவி, ‘தூயவரான தந்தையே’ நீர் மெய்யாகவே தூயவர்’ ‘தூயவர், தூயவர், தூயவர்’ இவை எடுத்துக்காட்டுக்கள் மட்டுமே. இவற்றைவிட மேலும் பல இடங்களில் திரித்துவத்தைக் குறிக்க ‘தூய’ என்னும் பதம் பயன்படுத்துவதைச் சுட்டிக்காட்ட முடியும்.

எனினும் இந்த பூசைப் புத்தகங்களில் புனிதருக்குரிய சிறப்புப் பகுதியில், அதாவது அவர்களது திருவிழா நாட்களில் ‘புனித’ என்னும் பெயரடை மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளமை கவனத்திற்குரியது. இதே திருப்பலிப் புத்தகத்தில் நற்கருணை மன்றாட்டு இரண்டில் ‘புனித அப்போஸ்தலர்’ ‘இவ்வுலகில் உலகுக்கு கந்தவர்களாயிருந்த புனிதர் அனைவருடன்’ என்னும் பதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளமை அவதானத்திற்குரியது.

## இலக்கண நோக்கு:

புனித / தூய, ஆகிய இரண்டு பதங்களுக்கும் அகராதிகள் அளிக்கும் விளக்கத்தினை இரண்டு வகைகளில் நோக்கலாம்.

1) புனிதம் என்பதற்கு தூய்மை என இணையான பதம் கூறப்பட்டு விளக்கமளிக்கப்படுகின்றமை

2) தூய்மை என்பது புனிதம் என்பதிலும் மேலான பொருளைக் கொண்டதென விளக்கமளிக்கப்படுகின்றமை. அதாவது தூய என்பதற்குச் சற்றும் மாசுபடாத, களங்கமற்ற எனப் பொருள் கொள்ளப்படுகின்றது.

அகராதிகள் அளிக்கும் விளக்கத்தினை மட்டும் அடிப்படையாகக் கொள்ளாது, கத்தோலிக்க திருச்சபையின் பாரம்பரியத்தின் பின்னணியில் இதனை நோக்குவதன் மூலமே இதற்குச் சரியான விளக்கத்தைப் பெறமுடியும்.

## தென்னிந்தியாவில் சில ஊடகங்கள் ‘தூய’ என்னும் பதத்தைப் பாவிக்கின்றனவே.

தென்னிந்தியாவில் சில ஊடகங்கள் புனிதருக்குத் ‘தூய’ என்னும் பதத்தைப் பாவிக்கின்றன. ஆகவே, இங்கு நாமும் ஏன் பாவிக்கக்கூடாது என்பது சிலரது வாதம். முதலில், தென்னிந்திய ஆயர் மன்றம் இதனை ஒருபோதும் அங்கீகரிக்கவில்லை என்பது கருத்திற் கொள்ளப்படவேண்டும். தென்னிந்தியாவிலும் சில ஊடகங்கள் மட்டுமேஇதனைப்பயன்படுத்துகின்றன. மேலும் எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு என்பது வள்ளுவர் முன்வைக்கும் அறிவுரை. பல விடயங்களில் தென்னிந்திய திருச்சபை ஏனைய நாடு களிலுள்ள தமிழ்க் கத்தோலிக்கருக்குப் பெரும் உதவியும், உந்துதலும் வழங்கி வருகின்றது வரவேற்கின்றோம். நன்றி நவில்கின்றோம். எனினும் தென்னிந்தியாவில் சில ஊடகங்களும் மற்றும் ஒரு சிலரும் கூறுவதனால் நாமும் அதை ஏற்கவேண்டும் என்பது நியாயமான வாதமல்ல. தமிழ்க் கிறிஸ்தவ இலக்கிய வளர்ச்சிக்கும், விவிலிய தமிழ் மொழிபெயர்ப்பிற்கும் இலங்கைக் கிறிஸ்தவர்களும் கணிசமான பங்களிப்புச் செய்துள்ளனர் என்பது கருத்திற் கொள்ளப்பட வேண்டியது. எனவே எமக்கும் தனித்துவம் உண்டு. நாமும் தனித்துவமாகச் சிந்தித்து சரியான முறையில் செயற்படுதலே பொருத்தமானது.

## இறைவனின் அன்னை மரியாவிற்கு விதிவிலக்கு

கத்தோலிக்கப் பாரம்பரியத்தில் அன்னை மரியாவுக்குச் சிறப்பான இடம் உள்ளது. அன்னை மரியா இறைவனின் அன்னையாக, அமல உற்பவியாக, கன்னிமை குன்றாத தாயாக, விண்ணகம் எடுத்துச் செல்லப்பட்டவராக, விண்ணக, மண்ணக அரசியாக முடிசூட்டப்பட்டவளாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றாள். பொது விவிலிய மொழி பெயர்ப்பில் அன்னை மரியாவுக்கு ‘அருள் மிகப் பெற்றவர்’ எனச் சிறப்பான புகழ்ச்சி வழங்கப்பட்டுள்ளது. நற்கருணை மன்றாட்டிலும் சிறப்பாகக் குறிப்பிடப்படுகின்றாா். இப்பின்னணியில் அன்னை மரியாவிற்குப் பொருத்தமான பெயரடை என்ன என்ற வினாவும் எழுகின்றது.

1989 இல் தென்னிந்தியத் தமிழக ஆயர்களின் அங்கீகாரத்துடன் இலங்கையில் மீள் பதிப்புச் செய்யப்பட்ட திருப்பலி நூலில் அன்னை மரியாவிற்கு புனித, பரிசுத்த என்னும் பெயரடைகளும் 2016 இல் தென்னிந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட திருத்திய பதிப்பில் புனித, தூய என்னும் பெயரடைகளும், 2017 இல் தென்னிந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட திருத்திய பதிப்பில் ‘புனித’ என்னும் பெயரடை மட்டும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இறைவனின் அன்னை மரியாவிற்கு அளிக்கப்பட வேண்டிய பெயரடை பற்றித் திருப்பலி நூலைத் தயார் செய்த குழுவினர்மத்தியிலேயேதெளிவற்றதன்மை காணப்பட்டுள்ளது என்பது தெளிவாகின்றது.

## நிறைவாக

மேற்கூறியுள்ளஅனைத்துவிடயங்களையும் கருத்திற்கொண்டு, கத்தோலிக்க திருச்சபையின் பாரம்பரியத்தின் பின்னணியில் நோக்கும்போது ஒரு காலத்தில் அர்ச்சியஷ்டர்கள் என்றும், பின்பு புனிதர்கள் என்றும் அழைக்கப்பட்டவர்களுக்கு புனித என்னும் பெயரடையேபொருத்தமானது. அதேவேளையில் ‘தூய’ என்னும் பெயரடை திரித்துவத்திற்கு மட்டுமே உரியது என்பதும் புலனாகின்றது.

# காவலன் கலசம்

## காவலன் கண்மணிகள்



அன்புக் கண்மணிகளே!

மலர்ந்துள்ள புதிய ஆண்டிலே புதுப்பொலிவோடும் மகிழ்வோடும் இறைவனின் பிள்ளைகளாக வாழும் உங்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களைக் கூறி நிற்கின்றேன்.

2018 ஆம் ஆண்டின் திருவழிபாட்டு ஆண்டானது எமது யாழ்ப்பாண மறைமாவட்டத்தின் இளையோர் ஆண்டாக மலர்ந்துள்ளது.

இறைதிட்டம் தேடும் இளையோர் பயணத்திலே சிறுவர்களாகிய நாமும் எம் குடும்பத்திலுள்ள, பங்கிலுள்ள அனைத்து அண்ணாமார் அக்காமார்களுக்காக எமது சிறிய கரங்களைக் குவித்து இறை தந்தையிடம் செபிப்போம்.

**'தடம் பார்த்துச் செல்பவர்கள் மனிதர்கள்**
**தடம் பதித்துச் சென்றவர்கள் புனிதர்கள்"**

எம்மைப் போன்று இம்மண்ணிலே மனிதர்களாக பிறந்து இறை வழியில் தம் வாழ்வை அமைத்துக் கொண்டவர்களே இன்று புனிதர்களாக என்றும் எம்முடன் வாழ்கின்றனர். பரந்து விரிந்த இவ்வுலகில் அகலத் திறந்திருக்கும் உலகத் தீமையின் வாயில் வழியே செல்லாது, ஒடுக்கமான கடின பாதை வழியே நடந்து இறையரசில் இடம்பிடித்துள்ள தூயவர்களின் வரிசையிலே. புனிதர்கள் வரிசையிலே புனித கிறகோரி நசியான்சன் கடும் புயலில் சிக்கி வாழ்வுக்காகப் போராடி உயிர் தப்பியதால் இறைபணிக்கே தன்னை முற்றுமுழுதாக ஒப்புக்கொடுத்தார். பாரீஸ் நகரப் பாதுபாவலியாக விளங்கும் புனித ஜெனவீவ் தனது பதினைந்து வயதிலே துறவியாக அர்ப்பணம் செய்தார். வாரத்தில் இரண்டு நாட்கள் மட்டும் பாணும் மரக்கறியும் உண்டு ஒறுத்தல் வாழ்வில் நிலைத்திருந்தார்.

புனித சிமியோன் ஆழமான செபத்திற்கும் கடினமான உபவாசத்திற்கும் முதலிடம் கொடுத்தவர். புனித அப்பொலினாறீஸ் கிறிஸ்தவர்களின் செபத்தின் வல்லமையை, இறைவனின் அற்பதமான செயற்பாட்டினை மண்ணுக்கு தெளிவாக்கினார். புனித வில்லியம் ஏழைகளை வளப்படுத்துவதில் தன்னை நிறைவாக அர்ப்பணித்தவர். புனித ஜோசவ் வாஸ் சம்மனசு சுவாமிகள் என்று அழைக்கப்பட்டவர். இலங்கை மண்ணின் விசுவாசத்தை காப்பாற்றியவர்.

ஏழைகளின், பிச்சைக்காரர்களின் அன்புத் தோழனான புனித பிரான்சிஸ் சவேரியாரின் இதயத்தில் சாந்தமும் தாழ்ச்சியும் நிறைந்திருந்தது.

இவ்வாறு பலர் தூயவர்களாக எம் திருச்சபையின் ஒளி விளக்குகளாக வழிகாட்டிகளாகத் திகழ்கின்றனர்.

உலகத்தின் அழிவுப்பாதையிலேயே எமது நாட்டங்கள் செல்கின்றது. இக்காலகட்டத்தில் எம் இளையோர்களுக்கான இறைவன் வகுத்த பாதையை கண்டடைவதற்கு வேண்டிய ஞானமும் இறையருளும் நிறைவாக கிடைக்க வேண்டும்.

எதிர்காலத்தில் சிறந்த கத்தோலிக்கர்களாக வாழ்ந்திடவும் இவ்வுலகில் தடம் பதித்துச் சென்றவர்களான எம் புனிதர்களின் வாழ்வையும் பணியையும் அறியவும் அவர்களிடம் இருந்த சிறந்த விழுமியங்களை இளையோர் தம் வாழ்விலும் கடைப்பிடிக்கவும் சிறுவர்களாகிய நீங்கள் அனைவரும் இறைதந்தையிடம் செபிக்க வேண்டும். அதனோடு நல் முன்மாதிரிகையோடு வாழும் எம் மூத்த சகோதர சகோதரிகளுடன் உரிய மரியாதையுடனும், அன்புடனும், ஒற்றுமையுடனும் பணிவுடனும் நடக்கவும் கடமைப்பட்டுள்ளீர்கள்.

ஏனென்றால் எதிர்காலத்தில் அவர்களைப் போற்றும் நீங்களும் இறை திட்டத்தினை ஏற்று வாழும் நற்கிறிஸ்தவ இளையோராக உருவாக இறைவன் உங்களையும் அழைக்கின்றார்.

எனவே எம் முன்னே சென்றவர்களின் புனித பாதையிலே நாமும் தடம் பதிப்போம். "ஆண்டவரே! உம் பாதைகளை நான் அறியச் செய்தருளும். உம் வழிகளை எனக்குக் கற்பித்தருளும். உமது உண்மை நெறியில் என்னை நடத்தி எனக்குக் கற்பித்தருளும். ஏனெனில், நீரே என் மீட்பராம் கடவுள். உம்மையே நான் நாள் முழுவதும் நம்பியிருக்கின்றேன்."

(திருப்பாடல் 25:4-5)

- மரியதாஸ் விக்டோரியா

## குடும்பம் ஒரு கோவில்!



அருட்பணி. வின்சன் பற்றிக் (அமதி)

'குடும்பம் ஒரு கோவில்', 'குடும்பம் ஒரு குட்டித் திருச்சபை'. 'நல்லதொரு குடும்பம் பல்கலைக் கழகம்' என்றெல்லாம் சொல்லி குடும்பத்தின் மேன்மையை எடுத்தியம்புவார்கள். நல்ல குடும்பங்களே நற் குழந்தைகளை, நல் இளைஞர்களை உருவாக்கும் பாசறைகளாக விளங்குகின்றன.

"என் உள்ளம் ஞானத்தைத் தேடி அலைந்தது. இதனால் நான் நல்லதொரு சொத்தைப் பெற்றுக்கொண்டேன். ஆண்டவர் எனக்கு நாவைப் பரிசாகக் கொடுத்தார். அதைக் கொண்டு அவரை நான் புகழ்வேன். நற்பயிற்சி பெறாதோரே, என் அருகே வாருங்கள். நற்பயிற்சியின் இல்லத்தில் தங்குங்கள். ஞானத்தின் நுகத்தை தலைதாழ்த்தி ஏற்றுக் கொள்ளுங்கள். உங்கள் கழுத்துக்களை வளைந்துகொடுங்கள். உங்கள் உள்ளம் நற்பயிற்சி பெறுவதாக. மிகுந்த பொருள் கொடுத்து நற்பயிற்சியைப் பெற்றுக் கொள்ளுங்கள். அதனால் பெருஞ் செல்வத்தை அடைந்து கொள்வீர்கள்" (சீராக்கின் ஞானம் 51:21-23, 26, 28).

"படைப்பின் தொடக்கத்திலேயே கடவுள் ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார். இதனால் கணவன் தன் தாய், தந்தையை விட்டுத் தனது மனைவியுடன் ஒன்றித்திருப்பான். இருவரும் ஒரேயுடலாய் இருப்பர். இனி அவர்கள் இருவர் அல்ல. ஒரே உடல். எனவே, இறைவன் இணைத்ததை மனிதர் பிரிக்காதிருக்கட்டும்!"(மாற்கு 10:6:9). இவ்வாறுஇயேசு, ஒருமை, கட்டவிழாமை ஆகிய பண்புகளை கத்தோலிக்க திருமணத்தின் இன்றியமையாப் பண்புகளாக வலியுறுத்துகின்றார். மேலும், கணவன், மனைவி ஆகிய இருவரும் ஒருவர் ஒருவரை அன்பு செய்தல், அன்பின் விளைவாகப் பிறக்கும் பிள்ளைகளை பொறுப்புணர்வோடு வளர்த்தெடுத்தல் ஆகிய கடமைகளை நிறைவேற்றக் கடமைப்பாடு உடையவர்களாகின்றார்கள்.

ஏகம், தூய்மை, கத்தோலிக்கம், அப்போஸ்தலிக்கம் ஆகிய நாற்பண்புகளைக் கொண்டு திருச்சபை காணப்படுவதுபோல, குடும்பமும் மேற்படி நாற் பண்புகளை தன்னகத்தே கொண்டு சிறந்து விளங்குகின்றது. பிள்ளைகளுக்கு இலவசமாய் நற்பயிற்சி வழங்கும் இல்லமாய் குடும்பம் துலங்க வேண்டும். பெற்றோர் எதைக் கொடுக்கின்றார்களோ அதையே பிள்ளைகள் பெற்றுக் கொள்கின்றார்கள்.

'முப்பத்தொரு நாட்களில் முரட்டுத்தனமான குழந்தையைக் குணப்படுத்துவது எப்படி?' என்ற ஆங்கில நூலிலிருந்து ஓர் இளம் தாய்க்கு இரு குழந்தைகள். சிறுவனுக்கு ஐந்து வயது. சிறுமிக்கு இரண்டு வயது. சிறுவனின் துடியாட்டத்தைத் தாங்கமுடியாத தாய் ஒரு சீரமியரை நாடினார். உடனே, சீரமியர் சிறுவனை விளையாட அனுப்பிவிட்டு, பெண்ணோடு பேச ஆரம்பித்தார். அவர் தனது உள்ளக்கிடக்கைகளை ஒழிவு மறைவின்றி வெளிப்படுத்தி, தனது மகனின் குறும்புத்தனத்தைப் பொறுக்க முடியாதிருப்பதை ஒப்புக்கொண்டார். சீரமியர் சில புதிய அணுகு முறைகளை முன்வைத்தார். அதாவது,


1. பிள்ளையின் நடவடிக்கைகளை நேர்முறையில் அவதானித்தல்.
2. அவை பற்றிய விபரணங்களைத் துல்லியமாகக் குறிப்பேட்டில் எழுதுதல்.
3. மாலை ஆறு மணிக்கு நாள் தோறும் குறிப்பேட்டின் உதவியோடு தாயும் மகனும் தனித்திருந்து சல்லாபித்தல்.
4. நல்ல செயற்பாடுகளை மட்டுமே எடுத்தியம்பி, பாராட்டி, பரிசளித்தல்.

இவ்வாறு நாள்தோறும் செயற்பட்டு வந்தபொழுது, தாயினது கத்திக் குழறுதல், கோபத்தோடு தகாத வார்த்தைகளை வெளிப்படுத்தல், வன்முறையான தொடர்பாடல் போன்றவை அருகிப்போக, மகனும் சாதாரணமான முறையில் நேரிய செயற்பாடுகளுக்கு இயைபாக்கம் பெற்றநிலையில் தேர்ச்சிபெற்றவனாய் காணப்பட்டான்.

'நல்ல பிள்ளை' என எல்லோராலும் பாராட்டுதல் பெற்றான். மூன்று வாரங்களின் பின்னர் நடந்த நிகழ்வு. மதிய சாப்பாட்டை இரு பிள்ளைகளுக்கும் வழங்கியபின்னர் தொலைபேசி மணி அடிக்கத் தாய் எழுந்துபோய் தொலைபேசியோடு தொடர்புகொண்டார். அவ்வேளை சிறுமி சாப்பிடாது அழத் தொடங்கினாள்.

உடனே சிறுவன் தனது சாப்பாட்டை மூடி வைத்துவிட்டு, சிறுமிக்கு சோறு ஊட்டி னான். "அச்சாப்பிள்ளை, தங்கா சாப்பிடுங்க" என்று செல்லமாகச் சொல்லி, சோறு உண்ண வைத்தான். இதனை அவதானித்த தாய், தனது மகனின் விரைவான வளர்ச்சியை முன்னிட்டு புளகாங்கிதம் அடைந்தார்.

## பொய் வேடரே!



மாசு களை மானோன் என
வீசு புயல் யேசுவை
காசு பெறும் மோசத்திற்காய்
கோசமிடும் மண்ணுலகே!

ஆசு நிறை ஞானமுடை
பேசும் அவன் வார்த்தைகள்
தூசு நிறை மனந்தனிலே
நாசமது பூசுமே

பூசையதில் வேசமென பொய்
நேசமிடும் மனிதரே
நூசை பெறு பாசமிகு
யேசு செயல் அறியாயோ?

த.அன்றூட் ஜக்சன்
வாழ்வகம்
2018 கலைப்பிரிவு
யா/ யூனியன் கல்லூரி

## சிந்திக்க ஓர் சித்திரம்



# திரு இசையும் அதன் வரலாறும்

அருட்பணி M.நிர்மலராஜ் CR
அருள் ஆசிரமம்



### முன்னுரை

இசை என்றால் இசைய வைப்பது என்பது பொருள். ஒரு கட்டுப்படுத்தப்பட்ட வலிமை இசை என்கின்றோம். அரங்கேற்று காதை அதிகாரம் 26 -28 "யாழும், குரலும், சீரும், மீடளும், தாழ்குரல், தன்னுமை, ஆடலோடு இவற்றின் இசைந்த இசைவு இசையாரும்" என்று கூறப்படுகின்றது. இன்னும் ஆழமாக நோக்கும்போது செவிக்கு இன்பமும் உள்ளத்திற்கு இதமான உணர்வைக் கொண்டு அமைக்கப்படும் ஸ்வரங்களின் தொகுப்பே இசை என்கின்றோம்.

"இசைக்கு இசையாதவர் யார் உளர்?" இசை உலக மக்களின் பொது மொழியாகும். மனித இனம் மட்டுமல்ல விலங்குகளும், தாவரங்களும் ஏன் உயிரினங்கள் அனைத்துமே இசைக்கு மயங்குகின்றன என்பது அறிவியல் உண்மையாகும். "மாட்டு வண்டி போகாத இடம்கூட பாட்டு வண்டி போகும்" என்றான் ஒரு கவிஞன். இசை உலகம் மனித வாழ்வில் இனிமையையும், புனிதத்துவத்தையும் அறிவிக்கும் ஆற்றலையும், சக்தியையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

### திரு இசை என்பது..

"கடவுளின் சாயலாகவும் பாவனையாகவும் படைக்கப்பட்ட மனிதன்" (தொடக்க அதி. 1 தி.27) தனது உள்ளத்து உணர்வுகளை வெளிப்படுத்த இசை பெரும் உதவுகின்றது. இது மனிதனை இறைவனோடு இணைக்கும் அல்லது பிணைக்கின்ற கலை என்று கூறுகின்றனர். எனவே தான் இறை மனித உணர்விலும் இசை மிக முக்கிய இடத்தைப் பிடிக்கின்றது. மனிதன் இறைவன் மீது கொண்ட அதிக அன்பையும், பாசத்தையும், பக்தியையும் தனது அனுபவ தன்மைகளையும் பரவசத்தில் பாடல் மூலமாக வெளிப்படுத்தி இறைவனின் பேரன்பையும், இரக்கத்தையும், அன்பையும் பெற இசை ஓர் ஊடகமாக மனித வாழ்வில் அமைந்துள்ளது. இதனால் தான் "இசைக்கு உருகாதோர் ஒருவருமில்லை" என சொல்லப்படுகின்றது.

"ஒரு தமிழ்த் திரைப்பாடலில் கூட இசையால் இறைவனை இரங்க வைப்பது மனிதன் குணமாகும். இசையில் மயங்கி இரங்கி வருவது இறைவன் குணமாகும்" என்று கூறப்படுகின்றது. எனவே தான் இறைவனை போற்றி, புகழ்ந்து, அராதித்து, மகிமைப்படுத்த நாம் வழிபாடுகளிலும், ஆலயங்களிலும் இசைக்கப்படும் இசையை திரு இசை (Sacred Music) என்று அழைக்கின்றோம்.

### பழைய திரு இசையின் பயன்பாடு...



இஸ்ராயேல் மக்கள் தங்கள் வழிபாட்டில் திரு இசையை பயன்படுத்தி வந்துள்ளனர் என்பதற்கு பல சான்றுகளை காணலாம்.

"வாருங்கள் ஆண்டவருக்குப் புகழ்பாடுவோம் (சங் 94:1)"

அல்லேலூயா! ஆண்டவர் தம் திருத்தலத்தில் அவரைப் புகழ்ந்தேத்துங்கள் " (சங் 1: 50-1)

அப்பொழுது மோயீசன் இஸ்ராயேல் மக்களோடு கூட ஆண்டவரைப் புகழ்ந்து பாடிய சங்கீதமானது ஆண்டவருக்குப் பாட்டுப் பாடுவோம். (யாத் 15:1)

தாவீதும் இஸ்ராயேல் மக்கள் அனைவரும் 'மரத்தால் செய்யப்பட்ட யாழ், வீணை, சுரமண்டலத்தோடும் மேள தாளம் முதலிய இசைக்கருவிகளோடும் ஆடிப்பாடி வந்து கொண்டிருந்தார்கள். (2 சாமு 6:5)

### புதிய ஏற்பாட்டில்...

புதிய ஏற்பாட்டில் பல நிகழ்வுகளில் இசையின் தாக்கமும், அதன் பயன்பாடும் நன்றாக நமக்கு அமைந்துள்ளது.

இறுதி இராவுணவின்போது, "பாடல்களின் பரமன்" இயேசு ஹல்கலல் (Hollel) என்ற பாடலைப் பாடினார். தம் நற்செய்தியில் புனித லூக்காஸ் 4 இறை புகழ்ச்சிப் பாடல்களை தருகிறார்.

1) மரியாவின் நன்றிப்பாடல் (லூக். 146-55)
2) இயேசுவின் பிறப்பின்போது வானதூதரின் பாடல் (லூக். 2:14)
3) சக்கரியாவின் பாடல் (லூக் 1:68-79)
4) சிமியோனின் பாடல் (லூக் 2:29-32)

புனித சின்னப்பரின் பாடல்கள் (பிலி. 2:6-1 கொலே. 1:15-20)

### நமது திருச்சபையில் திரு இசை...

தொடக்ககாலத்தில் குருவும் மக்களும் யூத மரபுபடி இசையோடு வாசிக்கும் பழக்கத்தைக் கொண்டிருந்தனர். குறிப்பாக புனித அம்பிரோஸ் காலத்தில் திருவெளிப்பாட்டில் அவர் இயற்றிய பாடல்கள் பயன்படுத்தப்பட்டது. அது குறிப்பாக (590 - 603) காலத்தின் புனித பெரிய கிரகொரியா திரு இசை பாடல்களின் கவனம் செலுத்தி இறைவழிபாட்டில் பாடல்களை முறைப்படுத்தினார். எனவே தான் இது கிரகோரியன் இசை (Gregorian Music) என்று அழைக்கப்பட்டது. இது 8ம் நூற்றாண்டில் ஐரோப்பா முழுவதும் பரவியது. ஆனாலும் 10 ம் நூற்றாண்டின் பின்பு புதுப்புது இசைகள் திருவழிபாட்டில் தோன்ற ஆரம்பித்தது. அதிலும் குறிப்பாக 9ம் நூற்றாண்டில் தான் "ஓகன்" (Organ) என்ற குழலிசைக் கருவி வழிபாட்டில் பயன்படுத்தப்பட்டது. அதிலும் குறிப்பாக ஏனைய இசைக்கருவிகளும் குழலிசைகளுடன் இணைந்து வாசிக்கப்பட்டது. அத்துடன் ஒரு குரலுக்கு பதிலாக பல குரல்களில் (four voices) பாடும் வழக்கமும் திரு இசையில் சேர்க்கப்பட்டது.

ஆனாலும் இசைக்கருவிகளின் செயற்கை காலப்போக்கில் பாடல்களை துல்லியமாக பொருள்வரை முடியாமலும், இசையின் தாக்கம் அதிகமாகியும் இசைக் கருவிகளின் ஒலியில் மூழ்கிப்போயின. காலப்போக்கில் திருப்பலி முழுவதும் இசைமயமாயிற்று. பாடல்களைப் பாடுவதும் கடினமாயிற்று. எனவேதான் காலப்போக்கில் பெரும்பாலான பாடல்களைப் பாடும் பொறுப்பை பாடல் குழுவினர் (Choir) ஏற்றுக் கொண்டனர். இந்நிலையில் இறைமக்கள் "ஆமென்" என்று மட்டும் பாடக்கூடிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

பின்பு (Opera) எனும் நாடகப் பாணி இசை திருவழிபாட்டில் புகுந்தது. இங்கு தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர் அல்லது இருவர் மட்டுமே பாடும் வாய்ப்பை பெற்றார்கள். இதை எல்லோராலும் பாடமுடியாத காரணத்தால் கிறிஸ்தவர்கள் அல்லாத பாடல்கள் கூட வாடகைக்கு அழைத்து வரப்பட்டு திருப்பலியில் பாடினார்கள். எந்தளவிற்கு என்றால், எந்தக் கோவிலில் யார் பாடுவார் எப்போது பாடுவார் என்ற விளம்பரம் கூட வெளிவந்தன. இதிலும் குறிப்பாக ஆசைக்காகவும் பாடல்களுக்காகவுமே அதிக மக்கள் கோவிலுக்கு வரத்தொடங்கினார்கள்.

அதிலும் குறிப்பாக இறைமக்கள் கூட பீடத்தை நோக்கி அமர்வதற்கு பதிலாக "பாடல்குழுவின் இருப்பிடம் நோக்கி மக்கள் இருந்து திருப்பலியிலும் பங்கு பற்றினார்கள். அதிலும் சில சமயங்களிலும் பாடல்களின் இறுதியில் கை தட்டியும், ஆரவாரமும் செய்துள்ளார்கள். இதனால் வழிபாட்டில் கூச்சலும் குழப்பமும் அதிகரித்து பக்தியின்மையும், வீண்பராக்குகளும் அதிகரித்த காரணத்தினால் 11ம் நூற்றாண்டில் திருதெந்தீன் சங்கம் இவைகளையெல்லாம் தடைசெய்தது.

ஆனாலும் 19ம் நூற்றாண்டு வரை இசையே திருவழிபாட்டின் மீது ஆட்சி செய்து கொண்டிருந்தது. அதேவேளையில் கிரகொரியன் இசையை மீளவும், புதுப்பிக்கவும் மேற்கொள்ளப்பட்ட அனைத்து முயற்சிகளும் பயனளிக்காமல் போனது. எனவே தான் புனித 10ம் பத்திநாதர் 22ம் திகதி நவம்பர் 1903 இல் புனித செசிலி அம்மாள் திருவிழா அன்று இசைபற்றிய ஒரு ஆணையை வெளியிட்டார். இசை திருவழிபாட்டு இசையை சீரமைக்கும் அரிய முயற்சியை 2ம் வத்திக்கான் சங்கத்தில் நிறைவு பெற்றது.

### திரு இசை பற்றி 2ம் வத்திக்கான் சங்கம் தருவது....

வழிபாட்டில் இசையின் தேவையை நன்கு உணர்ந்து 2ம் வத்திக்கான் பொதுச் சங்கம் "இறைபணி" பற்றிய கொள்கை திரட்டில் ஒரு அத்தியாயமே ஒதுக்கி இருக்கிறார்கள். "6ம் அதிகாரம்" அனைத்து உலகின் இசை பாரம்பரியம், மதிப்பிடக் ஒரு கரிய கருவூலம். இது சிறு கலைப் படைப்புக்களை விட சிறந்தது. காரணம் சொல்லோடு இசைந்த இசை, ஆடம்பர ஒரு இறைபணிக்கு ஏற்றதாக விளங்குகின்றது. திருப்பணியாளர்களுடன் மக்கள் செயலாற்றியும் பங்குகொள்ள திருச்சடங்குகளை பாடி நிறைவேற்றுவதன் வாயிலாக, இறைபணி நிகழ்ச்சி, ஒரு தனி மேன்மை பெறுகின்றது. இசையின் பண்பாடு, கலாச்சார, மொழி ரீதியான தன்மைக்கு ஏற்ப அமையும்போது இறை மக்களின் ஈடுபாடு அர்த்தமுள்ள விதமாக பொருணர்ந்து வழிபடவும், இறைவனைப் போற்றவும், ஆராதிக்கவும் ஏதுவாக அமையும் என்று பணிக்கின்றது.

இதிலும் குறிப்பாக திரு இசையின் தன்மைக்கேற்ப பாடலைத் தேர்ந் தெடுக்கும்போது பாடற்குரியவரின் தன்மைக்கும், திறமைக்கும் ஏற்றவாறு இசை அமைத்துப்பாடவேண்டும் என்றும் திருப்பலிக் கொண்டாட்டங்கள் பாடலாக அமைவது சிறந்தது எனவும், குறிப்பாக பாடல்களுக்கு முதலிடம் கொடுக்கவேண்டும் என்பதற்கும் சில கடினமான பாடல்களை பாட இயலவில்லை என்றால் இறைமக்கள் பங்கும் ஏற்படுத்தா வண்ணம் கடினமான பகுதிகளை மிகத்தெளிவான குரலில் வாசிப்பது மிகவும் நலம் என்கின்றது.

### திரு அருட்சாதன வழிபாட்டில் இசை...

இறைவழிபாட்டில் திருச்சடங்குகள் மிக முக்கிய இடம்பெறுகின்றது. இவைகள் சமூக கொண்டாட்டங்களாக அமையும் காரணத்தால் இசையின் பங்கு மிக முக்கியமான இடத்தைப் பெறுகின்றது. இறைமக்களின் வாழ்வு பலியோடு அதிக இணைவு கொண்ட காரணத்தினால் திருச்சடங்குகளின் உதாரணமாக: உறுதிப்பூசுதல், குருப்பட்டம், திருமணம் போன்ற திருச்சடங்குகளில் பாடல்கள் அதிகமாக இடம்பெறுவது மிகப் பொருத்தமானது என்று பகர்கின்றது.

### இசை மொழி...

இசை ஒரு பொது மொழியாகும். இது இன, மத, மொழிகடந்த ஊடகமாகும். இறைவழிபாட்டில் அந்தந்த மொழிற்கேற்ற இராகத்தையும், அந்தந்த நாட்டு இசைப் பாரம்பரியத்தையும் பயன்படுத்துவது மிகவும் நல்லது. இசையாளர் திரு -இசையை போற்றிப் பேணவும் அதன் புனிதத்துவத்தைப் பேணவும் தாம் சிறப்பான அழைப்பு பெற்றவர்கள் என்பதை உணர வேண்டும்.

### திருவழிபாடுகளின் இசைக் கருவிகளின் பயன்பாடு...

இறைவழிபாட்டில் இசைக்கருவியின் பயன்பாடு மிகவும் அவசியமும் தேவையாகும். 2ம் வத்திக்கான் சங்கத்தின் கூற்றுப்படி இசைக்கருவிகளை அனுமதிக்கும் போது நாட்டு மொழி, கலாச்சாரம், பண்பாடு இவைகளை கருத்தில்கொள்ளவேண்டும். வழிபாட்டிற்கு மெருகூட்டக்கூடிய அளவிலும் பக்தியை கூட்டக்கூடிய அளவிலும் பராக்குகளை போக்கும் வகையிலும், மற்றும் இறை உணர்வை தூண்டும் வகையிலும் இசைக் கருவிகள் இயக்கப்பட வேண்டும். குறிப்பாக இசைக்கருவிகள் பாடுவதற்கு பக்கபலமாக அல்லது உதவியாக இருக்க வேண்டுமே யொழிய பாடலின் வார்த்தைகள் பொருளை விளங்கா வண்ணம் அல்லது புரிந்து கொள்ளா வண்ணம் இசையை மீட்டுவது தவறாகும்.

அதிலும் குறிப்பாக இசைக்கருவிகளை வாசிப்பவர்கள் இறைவழிபாட்டிலும் அதிக ஈடுபாட்டோடு செயற்படுவது மிகவும் அவசியமாகும். இசையின் மேன்மையையும், புனிதத்துவத்தையும் உணர்ந்த தமிழக ஆயர்களின் இறைபணி ஆணைக்குழு கர்நாடக இசையை வழிபாட்டில் பயன்படுத்தவும் அவற்றின் இறப்பு தன்மைகளை உட்புகுத்தவும் திருப்பலியின் சிறப்பு பகுதிகளின் எளிய கர்நாடக இசையை பாடினால் இவை இறை வழிபாட்டிற்கு இனிமை சேர்க்கும் என்றும் இறை உணர்வைத் தூண்டும் சக்தியாக இந்த இசை அமையும் என்றும் பரிந்துரை செய்துள்ளது.

குறிப்பாக ஆலய வழிபாட்டில் பயன்படுத்தக்கூடிய இசைக்கருவிகளான ஆர்மோனியம், குழலிசை கருவி (organ) மிருதங்கம், வீணை, வயலின், யாழ்ரா ஆகியவையும் பிற இசைக்கருவிகளும் ஆலய வழிபாட்டு துணையாகவும், பக்திக்கும் பராக்குகளுக்கும் இடமளிக்கா வண்ணம் அமைய வேண்டும் என்றும் திரு இசையின் அவசியத்தையும், முக்கியத்துவத்தையும் உணர்ந்து குருத்துவ கல்லூரிகள் துறவற மடங்களின் மற்றும் கல்விக்கூடங்களிலும் இசைக்கருவிகளுக்கு முக்கியத்துவமும், மேன்மையும் அளித்து அதனை பயிற்றுவிப்பதும் இசை அறிவையும், இசை ஞானத்தையும் ஊட்டுவதும் அவசியம் என்று 2ம் வத்திக்கான் சங்கம் கூறுகின்றது.

### தற்போது வழிபாட்டில் இசை

தற்போது வழிபாடுகளில் இசைக் கருவியின் ஆதிக்கம் அதிகளவு இருந்தாலும் இசைக் கருவிகளை அதிகளவு பயன்படுத்தியும், பாடல்களை அவர்களின் குரல் வளத்திற்கேற்ப பாடல்களின் வரிகளுக்கும், தன்மைகளுக்கும் ஏற்ப பிரித்துப்பாடும் தரமும் குறைவடைந்து போவது வழிபாட்டின் ஈடுபாட்டில் பல சோர்வு நிலைகளையும், இசை மீது அதிக பற்றும் குறைந்த நிலையையும், வழிபாட்டைக் கடமைக்காக செய்யும் மன நிலையும் வளர்ந்துவிட்டது கவலைக்குரியது.

இன்னும் பாடல்குழுவினர் தமது பாடலின் தரத்தையும், பாடும் முறையில் பல மாற்றங்களையும் கொண்டு வருவது இறைவழிபாட்டில் ஈடுபடுவோர்க்கு ஊக்கத்தையும், ஆர்வத்தையும் ஏற்படுத்தும். உதாரணமாக இந்தியா போன்ற நாடுகளின் பாடல்குழுவினர் மற்றும் இசைக்கருவிகளை மீட்டுவோரின் பங்களிப்பு அதிகமாக இணைக்கப்படுவதால் திருப்பலியிலும், ஆலய வழிபாட்டிலும் இறைமக்கள் இசையின் தாக்கத்தால் இறை உணர்விலே தூண்டப்படுகின்றார்கள். எனவே இசை என்ற தெய்வீக கலையை வளர்ப்பதும், மற்றவர்களை இறைவன்பால் இணைப்பதும் நமது கடமையும், பொறுப்பும் ஆகும்.

### முடிவுரை

இன்று இசை மனிதனை வாழ் விக்கின்றது. இசை மனித வாழ்வின் எல்லா நிலைகளிலும் இணைந்துள்ளது. குறிப்பாக வழிபாடுகளில் இறை உணர்வை அனுபவிக்கவும், இறை அமைதியைப் பெறவும், காயப்பட்ட உள்ளங்களுக்கும், உடைபட்ட நெஞ்சங்களுக்கும் மன அமைதியைத் தரும் மருந்தாக இசை மனித வாழ்வில் இணைந்துள்ளது. எனவே இசையின் வழி இறைவனை போற்றியும், புகழ்ந்தும், மகிமைப்படுத்தியும் நமது விசுவாச பயணத்தில் நிலைத்து வாழ்வோம்.



# புதுமை புரியும் புதுமை மாதா

கரம் சுப்பி வந்தோமே
நிந்தன் படியேறி தாயே!
விழி நிரம்ப நீருடன் வந்தோமே
உந்தன் பாதமதாயே!
துயரங்கள் பறந்தோட கண்டோமே
உந்தன் பதியதில் தாயே!
கண்ணீரும் மறைந்திட கண்டோமே
நிந்தன் கடைக்கண் பார்வையில் தாயே!

மாசி மாதம் 2ம் திகதி உலகமே மகிழ்ந்து கொண்டாடப்படவேண்டிய திரு விழாக்களில் ஒன்றாகும். கடவுள் மனித அவதாரம் எடுத்ததன் பிற்பாடு இரண்டு முறை காணிக்கை ஆக்கப்படுகிறார். முதலாவது கோவிலில் கடவுளுக்கு காணிக்கை ஆக்கப்படுகிறார். இரண்டாவது, மனிதர்களுக்காக சிலுவை மரத்தில் தன்னை தானே காணிக்கை ஆக்குகிறார். இவற்றில் முதலாவதே இன்றைய திருவிழாவாகும்.

குழந்தை இயேசுவை அதன் பெற்றோர் யோசேப்பும், மரியாவும் கோவிலில் மோசேயின் சட்டப்படி ஆண்டவருக்கு அர்ப்பணித்த நிகழ்வினை குறிக்கும் இத் திரு விழாவானது, பல பாரம்பரியங்களில் கேண்டில்மஸ் (Candlemas) என அழைக்கப் படுகிறது. எரியும் மெழுகுதிரிகளோடு திருப்பலிக்கு முன் பவனியாக ஆலயத்துக்கு பக்தர்கள் வருவார்கள். அதனாலே இப் பெயர் இத்திருவிழாவிற்கு உண்டானது. இத்திருவிழா 40 நாட்களுக்கு மகிழ்வாக கொண்டாடப்பட்டு வருகிறது. மேலும், இந்த திருவிழாவினை பெரும் மகிழ்வாகவும் பெரும் கோலாகலமாகவும் திருச்சபை யில் கொண்டாடப்பட்டு வந்திருக்கிறது என்பது வரலாறாகும். ஏனெனில் இறை மகன் இயேசு மனித பாவநிலை போக்க மனித அவதாரம் எடுத்தார். இந்த நிகழ்வே மனித பாவம் போக்கும் நிகழ்வாகவும் எல்லோரையும் மீட்பதற்காக இறைவன் தாமே "எல்லாவற்றிலும் எல்லாரைப் போலான" மீட்பின் மறைபொருளை உல கிற்கு வெளிப்படுத்தும் நிகழ்வாகவும் அமைந்திருந்தது.

கடவுளாக இருந்த போதிலும் மனித அவதாரத்தை தான் ஏற்றதினால் மனிதர்களுக்கு அக்கால வழக்கப்படி நிகழ் கின்ற அத்தனை சடங்குகளையும் அவர் ஏற்றுக்கொண்டார் என்பதன் முதல் அடை யாளமாக இச்சடங்கு காணப்படுகின்றது. ஏனெனில் அக்கால வழக்கப்படி இச் சடங் கானது "சுத்திகரிப்புச் சடங்காக" நிகழ்ந்தி ருந்தது. பாவத்துடன் பிறக்கும் மனிதன் இச்சடங்கின் வாயிலாக சுத்திகரிக்கப்பட்டு இறைவனுக்கு உகந்தவனாக்கப்படுகிறான். இச்சடங்கினை அன்னை மரியாளும் இறைமகன் இயேசுவுக்கு நிகழ்த்தி அவரை காணிக்கையாக ஒப்புக்கொடுக்கின்றாள். "இறைமகன் இயேசு உலக மாந்தருக் கான" என்ற அடையாளத்தின் வெளிப்படை யாகவே இந்நிகழ்வானது கொள்ளப்படுகின் றது. இன்றைய பிரிவினைச் சபைகளின் "ஏன் அன்னை மரியாளுக்கு இவ்வளவு முக்கியத்துவம்?" என்ற கேள்வியின் விடையாகவும் இந்நிகழ்வு அமைந்திருக் கின்றது எனலாம். அதாவது மரியாள் அனைத்து நிகழ்வுகளையும் அறிந்திருந்த போதும் சாதாரண பெண் போன்று தன் குழந்தை என்ற எண்ணங்களுக்கு அப்பாற் சென்று இவர் இறைமகன். இவர் மக்க ளுக்காகவே அவதரித்தார். இவர் காணிக் கையாக்கப்பட்டாலே உலக மாந்தரின் பாவங்கள் களையப்படும் என்ற நிகழ்விற்கு அடிப்படையை விதைத்து விடுகிறாள். இந்த நிகழ்வின் வாயிலாக கடவுளும் உலகிற்கு ஒன்றை வெளிப்படுத்த முன்வருகிறார். இடையர்களுக்கும், ஞானிகளுக்கும், இவர் தான் இறைமகனின் தாய் என்பதை வெளிப்படுத்தியிருந்தபோதும் இந்நிகழ்வின் மூலம் முழு உலகிற்கே இவர்தான் கடவு ளின் தாய் என்பதை வெளிப்படுத்துகிறார்.

இந்த நிகழ்விற்கு சான்றாக திருத்தந்தை 2ம் அருள்சின்னப்பர் "மீட்பரின் தாய்" (Redemptoris Mater) என்னும் சுற்றுமட லின் வாயிலாக "திருச்சபையின் தாய்" என அறிவித்தார். அன்று கடவுளையே காணிக்கையாக்கி அன்னை மரியாள் உலகிற்கே தாய் ஆகின்றாள்.

கி.பி. 431ல் நிகழ்ந்த எபேசுப் பொதுச்சங்கமும் "திருச்சபையின் தாய்" என்று அறிவித்து மரியாளுக்கு பெருமை சேர்த்தது. மேலும் சில மரபுகளில் அன்னை மரியாள் "தியோடோக்கோஸ்" என்றும் அழைக்கப்பட்டுமுள்ளார். இதனுடைய பொருள் "கடவுளைச் சுமந்தவள்" என்பது ஆகும். இவ்வாறு மரியாளை பெருமைப்படுத்த திருச்சபைக்கு இந்நிகழ்வே காரண மாயிருந்து.

குருநகர் காணிக்கை அன்னை யின் திருவிழா (02.02.2018 வெள்ளிக் கிழமை) வெகு விமர்சையாக கொண்டப்படு கின்றது. கரைமீது அலைகள் நுரை யோடு காதல் செய்யும் அழகிய ஊராம் குருநகரில் அழகிய திருப்பதியில் கோயில் கொண்டெழுந்து தேடிவரும் பக்தர்களின் குறைதீர்த்து அவர்களின் கவலைகளைப் போக்கி எப்பொழுதும் ஆறுதலாகவும், தேறுதலாகவும் மகனிடம் பரிந்து பேசும் தாயாக வும் இருந்து வருகிறார். எண்ணிலடங்கா புதுமைகளுக்கு சொந்தக்காரியாகவும் விளங்குகின்றாள் புதுமைத்தாய் என்று பக்தர்களால் அழைக்கப்பட அன்னையின் எண்ணிலடங்கா புதுமையும் காரணமா கும். கண்களில் கண்ணீர் சிந்த அன்னை யின் பதிவாயிலிலே நின்று "புதுமை ஆச்சி" என்று அழைக்கும் பக்தர்களும் நித்தம் நித்தம் ஆலயம் தேடி வரும் பக்தர்களுமே அன்னையின் புதுமைகளுக்கு எல்லாம் சான்றாகும். "வெற்றி மாதா" என்று போர்த்துக்கீசர் அழைத்தமைக்கு அன்னை யின் புதுமைகளே காரணமாகும். போர்த் துக்கீசர் அன்னை மரியாளுக்கு முக்கியத் துவம் அளித்து தாம் செய்யும் போர்க ளுக்கு பாதுகாவலியாய் இருக்க மன்றாடிக் கொண்டார்கள். இதனால் அவர்கள் பல போர்களில் வெற்றி கொண்டார்கள் என்பது வரலாறு.

அதேபோல் வெற்றி அன்னை ஆலயத்தை யாழ் கோட்டையில் அமைத்து வழிபட்ட பின்னர் அவர்கள் போர்கள் வெற்றிபெற்றமையினால் அன்னையை அப்பெயர் கொண்டு அழைத்து வணக்கம் செலுத்தினார்கள்.

இத்திருநாள் குருநகர் வாழ் மக்க ளால் மகிழ்வாய் கொண்டாடப்படும் திரு விழாவாகும். புதுமைகளால் நிரம்பப்பெற்ற பக்தர்கள் அன்னைக்கு நன்றி செலுத்தி இத்திருவிழாவினை வெகுவிமர்சையாக கொண்டாடுகிறார்கள். அன்று மாலை அன்னை தேரேறி பவனி வரும் காட்சி கண்கொள்ளா காட்சியாகும். குருநகர் வீதியெங்கும் அலங்கரித்து அன்னையின் கடைக்கண் பார்வைக்காய் காத்திருக்கும் கூட்டம் என மகிழ்வாகவே இன்றைய நாள் இருக்கும். இவ் ஆலயத்தில் நடக்கும் "விற்றுவாங்கும் சடங்கும்" மரபு வழியாய் நிகழ்ந்து வந்திருக்கும் சடங்குகளில் ஒன் றாகும். தங்கள் குழந்தைகளை காணிக் கைத் தாயிடம் விற்று அதாவது அவளிடம் ஒப்படைத்து பின்னர் அவளிடமிருந்து பணத்தினைக் காணிக்கையாக்கி குழந்தை களை தம்மிடம் வாங்குவது ஆகும். இதன் மூலம் அன்னையின் குழந்தையான பின்னர் நோய்களும், பொல்லாப்புக்களும் சூழ்ந்து கொள்ளாது என்றும் எல்லாத் துன்பங்களிலிருந்தும் காணிக்கைத்தாய் பாதுகாத்துக்கொள்வார் என்ற நம்பிக்கை யின் மரபு வழி வெளிப்பாடாக இச்சடங் கானது இவ் ஆலயத்தில் இடம்பெற்று வந்திருக்கின்றது. இப்போது அருகிப்போய் இருந்தாலும் "விற்று வாங்க" என தேடி வரும் பக்தர்களின் எண்ணிக்கை குறையாமல் தொடர்ந்து கொண்டே இருக் கின்றது. வேறு எந்த ஆலயத்திலும் காணப்படாத சடங்கு முறை இவ் ஆலயத்தில் இடம்பெற்று வந்திருக்கின்றது.

யாழ்ப்பாணப் பட்டணத்தில் கட்டப் பட்ட ஆலயம் என்ற பெருமையும் வெற்றி மாதா ஆலயம் (புதுமை மாதா ஆலயத்தின் முன்னைய பெயர்) பெற்றிருக்கின்றது. இதற்கான பல வரலாற்றுச் சான்றுகள் காணப்படுகின்றன. புதுமை மாதா மீது தணியாத தாகம் கொண்ட சுவாமி ஞானப் பிரகாசியார் "யாழ்ப்பாண வைபவமாலை" என்ற நூலுக்கு வழங்கிய விமர்சன உரை யும் இதற்கு பெரும் சான்றாக அமை கின்றது. அத்தோடு ஞா.ம.செல்வராஜ் என் பவர் 1958ம் ஆண்டு எழுதிய "புதுமை மாதா ஆலய சரித்திர வரலாறு" என்ற நூலும் எடுத்துக் காட்டாக திகழ்கின்றன.

முதலில் யாழ்ப்பாணப் பட்டணத்திற்கு

**கீ.மே.நித்தியானந்தா**

அன்னையின் ஆலயம் தேவை என்ற நிலையை உணர்ந்த கண்ணாடிச் சுவா மியார் என்று அழைக்கப்பட்ட "பிறே பேதுரு டி பெந்தம் கோர்" (Fra Padro De Betancor) என்னும் குருவான வர் அப்போதைய இந்தியாவின் தஞ்சாவூரை ஆண்டுவந்த மன்னன் உபகரித்த பணத் தைக் கொண்டு அத்திவாரமிட்டார் என்று வரலாற்றுச் சான்றுகள் கூறுகின்றன. அத்தோடு வெற்றி மாதா ஆலயத்தின் பங்குத்தந்தையாக இருந்த பிரான்சிஸ்கன் சபையைச் சேர்ந்த "பிரான்சிஸ்கோ டு சான்றோ அன்ரோனியோ" என்னும் குரு வானவர் இவ் ஆலயத்தில் அந்தோனியார் சுரூபம் ஒன்றினை வடிவமைக்க கேர ளாவிலுள்ள கொச்சின் நகரிலிருந்து ஒரு மரக்குற்றி ஒன்றினை கொண்டு வந்தார். இம்மரக்குற்றியிலேயே புதுமை மாதா திருச்சுரூபம் செதுக்கப்பட்டது. (தற்போது கோவாவில் உள்ள திருச்சுரூபம்). இத்திருச்சுரூபம் செதுக்கப்படத் தொடங்கிய காலம் முதலே அங்கு பல புதுமைகள் நிகழ்ந்தன என்பதற்கு அத்திருச்சுரூபத்தை செதுக்கிய அன்னக்குட்டியும், அவரது மகள் அஞ்சியாவும் இதற்கு சாட்சியாவர். இவ்வாறு இடம்பெற்ற பல புதுமைகளால் வெற்றி மாதாவே "யாழ்ப்பாண இராச்சியத்தின் பாது காவலி" என்று போர்த்துக்கீசர் பிரகடனம் செய்தது வரலாறாகும்.

பின்னர் போத்துக்கீசர் போர்களில் தோல்வியுற்று அவர்களுடைய காலம் நிறைவடைய ஒல்லாந்தர் காலத்தில் கோட்டையிலுள்ள வெற்றி மாதா ஆலயம் உடைத்து அழிக்கப்பட்டது. பின்னர் வெற்றி மாதாவுக்கு ஆலயம் தேவை எனவும் வெற்றி மாதாவின் திருச்சுரூபத்தை பாதுகாக்கவும் ஆலயம் ஒன்றினை அமைக்க வேண்டிய தேவை உண்டானது. அப்போது மக்களற்ற மரங்கள் செறிந்து காடாக கிஞ்ஞா பற்றைகள் சூழப்பட்ட கரையூர் பகுதியில் இரகசியமாக ஆலயம் அமைக்கப்பட்டு மக்கள் வழிபாடு செய்தனர். இந்த ஆலயமே குருநகர் புதுமை மாதா ஆலயம் என "புதுமை மாதா ஆலய சரித்திர வரலாறு" மற்றும் "யாழ்ப்பாண வைபவமாலை" என்பன சான்று பகருகின்றன.

தற்போதைய புதிய ஆலயமானது முற்று முழுதாக கட்டடப்பணிகள் நிறை வுற்று அழகாக தோற்றமளித்து நிற்கின்றது. நீண்ட காலம் இவ் ஆலயம் பூரணத்துவம் பெறுவதற்கு தேவையானதாய் காணப்பட்ட தற்கு போர்க்கால நிலைமையும், பொருளாதார நிலையும் காரணமாகும். இந்நிலையிலும் அன்னையின் பரிந்துரை யால் இவ் ஆலயம் இன்று பூரணத்துவப் படுத்தப்பட்டு அழகாய் காட்சியளிக்கின்றது.

அன்றைய பங்குத் தந்தையாக இருந்த அ.பி.ஜெயசேகரம் அடிகளாரின் ஆலோசனைக்கு அமைவாக புதிய ஆலயத் தின் தேவை உருவாகியிருந்தது. அப் போதைய ஆயராக இருந்த தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களால் அத்திவாரமிடப்பட்டு ஆரம்பித்து வைக்கப் பட்டது. பின்னர் பங்குக் குருவாக வருகை தந்த ஆ.எஸ்.சகாயநாயகம் அடிகளாரினால் இப்பணி தொடரப்பட்டது.

இவ்ஆலயத்தின் வரைபடத்தினை அருட்பணி. அ.வேதநாயகம் (அ.ம.தி) உருவாக்கி இருந்தார். பங்குத்தந்தையின் அயராத முயற்சியினால் ஆலய கட்டடத்தின் பெரும் பகுதி முடிக்கப்பட்டு வழிபாட்டிற்காய் திறந்து வைக்கப்பட்டிருந்தது.

அதற்கு பின்னர் வருகை தந்திருந்த பங்குத்தந்தையர்களான அருட்தந்தை ஆர். எஸ்.நேசராஜா, அருட்தந்தை மௌலீஸ், அருட்தந்தை. ரவிச்சந்திரன் ஆகியோரின் முயற்சியினாலும் தற்போதைய எமது ஆயர். பேரருட்திரு. யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் ஆலோசனையினாலும் அன்னையின் பக்தர்களின் பங்களிப்புனும், பங்கு மக்களின் பெரும் ஒத்துழைப்புடனும், சிறந்த கட்டடப் பணியாளர்களின் சிறந்த பணியிலும் இவ் ஆலயம் பூரணத்து வப்படுத்தப்பட்டு புதுப்பொலிவுடன் நிமிர்ந்து நிற்கின்றது. இதுவரை கால அன்னையின் புதுமைக்குப் பாதுகாப்பிற்கும் நிமிர்ந்து நிற்கும் இவ் ஆலயமே சாட்சியாகும்.

## சிந்திக்க ஒரு சிறுகதை....

ஒரு மனிதன் ஆற்றங்கரை அருகே வீடொன்றைக் கட்டினான். இதைப் பார்த்த ஒருவன் வெள்ளம் வந்தால் அடித்துக்கொண்டு போய்விடும் என்று எச்சரித்தான். அதற்கு வீடு கட்டியவன் இதற்கு நான் பயப்படமாட்டேன். என் கடவுள் என்னைக் காப்பாற்றுவார் என்று கூறினான். வெள்ளம் வந்து விட்டது. அரைவாசிக்கு நீர் வந்துவிட்டது. அதனால் வீடு கட்டியவன் அங்கிருந்த மேசைக்கு மேல் ஏறி நின்றான்.

இதை பார்த்த ஒருவன் வள்ளத்தில் சென்று அவனை வரும்படி அழைத்தான். அதற்கு வீடு கட்டியவன் நான் வரமாட்டேன் கடவுள் என்னைக் காப்பாற்றுவார் என்று கூறினான். மீண்டும் வெள்ளம் கூடியது. நீர் வரத்து அதிகமாக வீட்டின் கூரைக்குமேல் ஏறி நின்றான். இதனைப் பார்த்த ஒருவன் விமானத்தில் சென்று அவனை வரும்படி அழைத்தான். அதற்கும் அவன் நான் வரமாட்டேன். கடவுள் என்னைக் காப்பாற்றுவார் என்று கூறினான். இன்னும் நீர் அதிகமாக வந்ததால் அவன் நீரில் அடித்துச் செல்லப்பட்டான்.

மிக கஸ்டத்தின் மத்தியில் கரை ஒதுங்கினான். அவன் "ஆண்டவரே நான் உம்மை நம்பினேன். இப்படிச் செய்து விட்டீரே" என்று கூக்குரலிட்டான். கடவுள் அவன் முன் தோன்றி "மூடனே! உன்னுடைய ஆபத்தைக் கண்டு உன்னைக் காப்பாற்றுவதற்கு மூன்று பேரை அனுப்பினேன். நீ உன் முரட்டு விசுவாசத்தால் அத்தனையும் இழந்து விட்டாய்" என்று கூறினார்.

# நிறைந்த கனிதரும் குடும்பம்

அருட்பணி சிங்கராயர் ஸ்ரீவன் (CMF)

எந்த வாழ்க்கையை நாம் தெரிவு செய்தாலும் இல்லறமோ துறவறமோ. அன்பின் முழுமையை நிறைவை அடைவதே பிரதான நோக்கமாக உள்ளது. எனது வாழ்க்கைத் துணையின் முழுமையை அடைய எனது அர்ப்பணம் தேவைப்படுகிறது. இல்லற அன்பு செழிக்க. திருமண வாழ்வு தழைக்க கணவனும் மனைவியும் இந்த அன்பின் கட்டங்களைப் புரிந்து கொள்ள வேண்டும்.

ஒருவர் ஒருவருக்கு அர்ப்பணிப்பதன் மூலம் இறையாசீருடன் அன்பின் பல கட்டங்களைப் புரிந்து கடந்து முழுமையை நோக்கிப் பயணிக்கலாம்.

அன்பின் கட்டங்கள்

- காட்சியும் காதலும்
- ஏமாற்றம்
- போராட்டம்
- தெளிவும் புரிந்துணர்வும்
- உண்மையான அன்பும், ஆன்மீக வளர்ச்சியும்

## காட்சியும் காதலும்

காதல் எனப்படுவது வசந்த காலத்தை என்றென்றும் மகிழ்ச்சியாக இருக்கப் போவதாக நாம் உணர்கின்றோம். நமது துணைவியரைக் காதலிக்காமல் இருப்பதை நம்மால் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியாது. இது நாம் சூதுவாது அறியாத ஒரு நேரம். அப்போது காதல் அழிவே இல்லாதது போல் தோன்றும்.
கற்பனை உலகத்தில் மிதக்கின்றோம்.
நமது அதிர்ஷ்டத்தை நினைத்து மகிழ்ச்சியில் நினைக்கிறோம்.

காதலுக்கு உள்ள மயக்கம். மோகம். ஈர்ப்பு. ஆற்றல் யாவும் சேர்ந்து அடுத்தவரின் குறைகள் எதுவும் கண்ணில் படாமல் செய்து விடுகின்றன. எல்லாமே கச்சிதமாக இருப்பதாகவும் எதுவித முயற்சியும் இன்றி சுலபமாக வேலை செய்வது போலவும் தோன்றும் ஒரு மாயா ஜாலமான நேரம் இது. நமது துணைவனோ அல்லது துணைவியோ தான் நமக்கு மிகப் பொருத்தமானவன். பொருத்தமானவள் என்று அப்போது தோன்றும் நாம் அவருடன் சேர்ந்து ஆனந்த நடனமாடுகிறோம்.

## ஏமாற்றம்

நாம் நினைத்த அளவுக்கு நமது துணைவர் அவ்வளவு கச்சிதமானவர் இல்லை என்பதையும் நமது உறவு மேம்படுவதற்கு நாம் முயற்சி. பயிற்சி எடுக்க வேண்டும் என்பதையும் நாம் உணர்கிறோம். நமது துணைவனோ அல்லது துணைவியோ தவறுகள் செய்யக்கூடிய பல விதங்களிலும் குறைபாடுகள் நிறைந்த மனிதரும் கூடத்தான் என்பது புரியத் தொடங்குகின்றது.

எரிச்சலும் ஏமாற்றமும் எழுகின்றன. அன்பைக் கொடுப்பதும். நமக்குத் தேவையான அன்பைப் பெறுவதும் முன்பு இருந்தது போல் அவ்வளவு சுலபமாக இல்லை. நாம் எல்லா நேரங்களிலும் நம்மால் அன்பு செலுத்த முடியவில்லை என்பதையும் நாம் கண்டறிகிறோம். நாம் கற்பனை செய்து வைத்துள்ள காதல் இது வல்ல. இந்தக் கட்டத்தில் பல தம்பதியினரின் மாயை விலகுகிறது. உறவை மேம்படுத்தும் முயற்சியில் ஈடுபட அவர்கள் விரும்பவில்லை. ஒருவர் மீது ஒருவர் குற்றம் சுமத்துகின்றனர். குறை கூறுகின்றார்கள். ஏமாந்து விட்டேனோ? என்ற வேதனையின் கேள்வி மனதில் முளைக்கும் நிலை இது. எத்தனை தடவை சொன்னாலும் இந்த ஆள் திருந்திற ஆள் மாதிரி இல்லையே என்று மனைவியும் சின்னச் சின்ன காரியத்துக்கெல்லாம் ஏன் இவளுக்கு இவ்வளவு எரிச்சல் வருது? என்று கணவனும் மௌனமாய்ப் புலம்பும் காலம் இது.

இந்தக் கட்டத்தில் கடின பயிற்சி தேவைப்படுகிறது. நமது துணைவரின் தேவைகளையும் நிறைவேற்ற வேண்டும். அதே சமயத்தில் நமக்குத் தேவையான அன்பையும் அவரிடமிருந்து கேட்டுப் பெற வேண்டும். அது தானாகவே நிகழ்வதில்லை.

## போராட்டம்

ஏமாற்றம் அடைகிற இருவரும் என்ன செய்யத் தொடங்குவார்கள்? நான் மட்டும் கவனமாய் இருந்து. சில காரியங்களைச் செய்தால் இவளை என் வழிக்குக் கொண்டு வந்து விடலாம். நான் நினைத்ததை எல்லாம் செய்கிற பெண்ணாய் இவளை மாற்றி விடலாம் என்று கணவனும் திருமணம் செய்து கொண்டபோது. எப்படி இருந்தாரோ எப்படி சின்னச் சின்ன விருப்பங்களையும் மதித்து நடந்து கொண்டாரோ. அதேபோல இவரை மறுபடியும் மாற்றிவிட முடியும் என்று மனைவியும் நினைத்து போராடத் தொடங்குகிறார்கள்.

யாருக்கு இங்கே அதிகாரம்? யார் சொல்வது இங்கே சட்டம்? நீயோ நானோ? என்ற போராட்டம் தீவிரமாய் நடப்பது இந்நிலையில் தான். தங்களது அதிகாரத்தை நிலைநாட்ட இருவரும் வெவ்வேறு உத்திகளைக் கையாளும் வேதனையான கட்டம் இது. அடுத்தவரின் உணர்வுகள். மகிழ்ச்சி பற்றிக் கவலைப்படாமல் தன் அதிகாரத்தை நிலைநாட்டுவதே இருவரின் இலக்காய் ஆகிவிடுகிறது.

திருமணம் நடந்து ஏழெட்டு ஆண்டுகளில் வரும் இந்நிலையின் போது தான் அதிகமான மணமுறிவுகள் நிகழ்வதை ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

அடுத்தவரைத் தன் விருப்பத்திற்கேற்ப மாற்ற முடியாது. அது முடியாது என்று புரிந்ததும் "போதும் விடு கையை" என்று அடுத்தவரின் கையை உதறிவிட்டு செல்வது தானே மணமுறிவு?

ஆனால் இந்நிலையிலும் பொறுமையாய். நம்பிக்கையோடு இருப்பவர்கள் அடுத்த நிலைக்கு வருகிறார்கள். இதுவரையில் இல்லாத விவேகமும். தெளிவும் இந்நிலையில் கைகூடுகின்றன. இருவரும் வெற்றிபெறவேண்டும். சரியான முறையில் அணுகவில்லை என்றால் தோல்வியாகி விடலாம்.

## தெளிவும் புரிந்துணர்வும்.

இந்த நேரத்தில் நம் இதயம் திறந்து நமது வலிமிக்க உணர்வுகள் வெளிவருகின்றன. நம் துணைவரிடம் அன்பையும் நிறைவையும் எதிர்பார்க்காமல் தமக்குள் அவற்றை தேடிப் பார்ப்பதற்கான நமது தனிப்பட்ட வளர்ச்சிக்கான தருணம் இது.

அடுத்தவரின் எரிச்சலூட்டும் காரியங்களுக்காக நான் இவ்வளவு அலட்டிக் கொள்ள வேண்டிய அவசியமே இல்லை. இவை இந்த ஆளிடம் இருந்தால் என்ன? இருந்து விட்டுப் போகட்டுமே. மற்ற குணங்கள் எத்தனை உள்ளன. "நல்லவற்றைப் பார்த்து எனக்குப் பிடிக்காதவற்றைப் பார்த்தும் பார்க்காதது போல இருந்து கொள்வேன்" என்று இருவரும் தெளிவு பெறுகின்றனர்.

சிந்திக்கும் தம்பதியருக்கு வெற்றிகரமான திருமண வாழ்வின் முக்கியமான இன்னொரு இரகசியமும் இந்நிலையில் தான் புரிகிறது. "நெருக்கம் மட்டுமே இருந்தால். நிம்மதிக்கும் மகிழ்ச்சிக்கும் வாய்ப்பில்லை. நெருக்கத்தோடு விலகியிருப்பதும் அவசியம். இருவரும் ஒருவராக வேண்டியது அவசியமும் இல்லை. சாத்தியமும் இல்லை. எனவே நாம் இருவராகவே இருந்து ஒருவருக்கொருவர் துணையாய் பிரியாத துணையாய் இருப்போம் என்று புரிந்து கொள்ளும் விவேகம் கைகூடுகிறது.

## உண்மையான அன்பும், ஆன்மீக வளர்ச்சியும், முழுமையை நோக்கிய பயணமும்

ஒருவரை மற்வர் நிறைகுறைகளோடு ஏற்றுக்கொண்டு நிறைகளைப் பற்றிய மகிழ்வும். நன்றியுணர்வும். குறைகளை எளிதாய் எடுத்துக் கொண்டு சிந்திக்கிற பக்குவமும் வாய்க்கும் ஐந்தாவது நிலையே இறுதி நிலை.

உறவை குலைக்கும் அடிப்படை வேறுபாடுகள் தன்முனைப்பை அகற்றி மனந்திறந்து பேசி நல்லவற்றைப் பாதுகாத்து தீயவற்றை விலக்கி அடுத்தவருக்காக விட்டுக்கொடுத்து வாழ்வதன் மூலம் உறவை வளப்படுத்திக் கொள்ளலாம்.

நம்மை நேசித்துக் குணப்படுத்திய பிறகு மீண்டும் காதல் திரும்பி வருகிறது. மீண்டும் நம்பிக்கை. அன்பு மற்றும் பரிவிரக்கம் போன்ற பண்புகளினால் ஆசீர்வதிக்கப்படுகின்றோம். எமது ஆன்மதேடல். அன்பின் பயிற்சிகள். குணமாதல் மூலம் தமது மனதை விசாலப்படுத்தி தன்னலமற்ற அன்பையும் உணரச் செய்கின்றது.

துன்பதுயரங்கள் வாழ்வின் சவாலான நேரங்களில் ஒருவரை ஒருவர் ஆதரிக்க இந்த பழ்நிலைகளை குறித்து ஒரு சிறந்த விழிப்புணர்ச்சி கொண்டிருப்பதன் மூலம் உங்களது துணையை தேவைகளுக்கேற்ப உங்கள் அன்பான ஆதரவை வழங்கி ஆச்சரியப்படத்தக்க விதத்தில் உறவு நெருக்கத்தையும் மனநிறைவையும் பெற்று மகிழலாம்.

# நல்லாயன் தினம் – 2017

## பங்குகளில் சேர்க்கப்பட்ட நிதி விபரம்

நல்லாயன் நிதியம் ஆரம்பிக்கப்பட்டு தங்களின் உதவியை நாடியபோது இறைபணியாற்றும் குருக்களுக்கு இறைமக்களாகிய தாங்கள் மனமுவந்தளித்த தாராள உதவிக்கு யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தனது விசேட நன்றிகளைத் தெரிவித்து இறையாசீர் வழங்கி நிற்கின்றார்.

| பங்கு | தொகை |
|---|---|
| **யாழ்ப்பாண மறைக்கோட்டம்** | |
| 1. பேராலயம் | 30,000.00 |
| 2. குருநகர் | 70,000.00 |
| 3. அடைக்கல அன்னை ஆலயம் | 38,850.00 |
| 4. பாசையூர் | 25,000.00 |
| 5. நாவாந்துறை | 18,720.00 |
| 6. அஞ்சனந்தாழ்வு / ப.கழகம் | 5,340.00 |
| 7. பண்டியன்தாழ்வு | 11,500.00 |
| 8. கொழும்புத்துறை | 12.500.00 |
| 9. கொய்யாத்தோட்டம் | 4,780.00 |
| 10. திருநெல்வேலி | 2,100.00 |
| 11. கோப்பாய் | 6,000.00 |
| 12. சுண்டிக்குளி | 27,500.00 |
| 13. நல்லூர் | 6,460.00 |
| 14. மணியந்தோட்டம் | 16,000.00 |
| **தீவக மறைக்கோட்டம்** | |
| 1. மண்டைதீவு | 8,800.00 |
| 2. கரம்பன் | 20,000.00 |
| 3. நாரந்தனை | 21,000.00 |
| 4. ஊர்காவற்துறை | 12,760.00 |
| 5. நெடுந்தீவு | 81,911.00 |
| 6. சாட்டி – அல்லைப்பிட்டி | 5,500.00 |
| 7. புங்குடுதீவு | 6,400.00 |

| பங்கு | தொகை |
|---|---|
| **இளவாலை மறைக்கோட்டம்** | |
| 1. இளவாலை | 46,680.00 |
| 2. மாதகல் | 7,200.00 |
| 3. சில்லாலை | 20,000.00 |
| 4. பண்டத்தரிப்பு | 6,200.00 |
| 5. விளான் | 5,340.00 |
| 6. மானிப்பாய் | 16,630.00 |
| 7. மாரீசன்கூடல் | 2,000.00 |
| 8. உரும்பிராய் | 60,000.00 |
| 9. ஆனைக்கோட்டை | 32,400.00 |
| 10. குளமங்கால் | 21,810.00 |
| 11. மல்வம் | 20,000.00 |
| 12. வலித்தூண்டல் | 3,900.00 |
| **பருத்தித்துறை மறைக்கோட்டம்** | |
| 1. பருத்தித்துறை | 21,000.00 |
| 2. தாளையடி | 2,280.00 |
| 3. அச்சுவேலி | 3,500.00 |
| 4. கரவெட்டி | 8,000.00 |
| 5. மிருசுவில் | 4,500.00 |
| 6. சாவகச்சேரி | 22,510.00 |
| 7. மணற்காடு | 50,000.00 |
| 8. சக்கோட்டை | 26,840.00 |
| 9. பளை, முகமாலை | 6,460.00 |
| 10. கட்டைக்காடு | 3,150.00 |

| பங்கு | தொகை |
|---|---|
| **கிளிநொச்சி மறைக்கோட்டம்** | |
| 1. கிளிநொச்சி | 10,000.00 |
| 2. வலைப்பாடு | 20,000.00 |
| 3. உருத்திரபுரம் | 14,000.00 |
| 4. வட்டக்கச்சி | 2,000.00 |
| 5. அக்கராயன் | 2,000.00 |
| 6. மல்லாவி | 2,000.00 |
| 7. முழங்காவில் | 15,650.00 |
| 8. குமுழமுனை | 3,100.00 |
| 9. பூநகரி | 3,060.00 |
| 10. நாச்சிக்குடா / [illegible] | 3,800.00 |
| **முல்லைத்தீவு மறைக்கோட்டம்** | |
| 1. முல்லைத்தீவு | 15,000.00 |
| 2. புதுக்குடியிருப்பு | 5,000.00 |
| 3. மாங்குளம் | 2,500.00 |
| 4. இரணைப்பாலை | 20,500.00 |
| 5. அலம்பில் | 2,012.00 |
| 6. வலைஞர்மடம் / வற்றாப்பளை | 5,000.00 |
| 7. கொக்கிளாய் | 800.00 |
| 8. உடையார்கட்டு | 4,250.00 |
| 9. தர்மபுரம் | 5,500.00 |
| | 957,583.00 |
| திருமதி. இருதயநாதர் (நவாலி) | 50,000.00 |

அருட்பணி செ.நேசநாயகம்,
நிதி முகாமையாளர்,
யாழ். மறைமாவட்டம்,
ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.

# யாழ்ப்பாண மறைமாவட்டம் ஒரு வரலாற்றுப் பார்வை

## பின்னணி, தோற்றம், வளர்ச்சி



### ஆயர் பெற்றக்கீனியின் இறுதி நடவடிக்கை

(சென்ற இதழின் தொடர்ச்சி..)

சவிரிமுத்து அடிகள் கூறுவதன்படி ஆயர் பெற்றக்கீனியின் யாழ் திருத்தூது மறைமாவட்டத்தைப் பிரிக்கும் ஆலோசனை செமேரியா அடிகள், ஆயர் பெற்றக்கீனி, விசுவாசப்பரப்புதல் சபையினர் ஆகியோரின் கடிதப்போக்குவரத்தின் பின்னணியில் முன்வைக்கப்பட்டுள்ளதாகப்படுகின்றது. ஐரோப்பாவிலிருந்து கூடுதல் மறைப்பணியாளரைப் பெறுவதற்கான செலவுகளைக் கடவுள் பார்த்துக் கொள்வார் என்று சுட்டிக்காட்டினார். அடிப்படையில் திருத்தூது மறை மாவட்டப்பிரிப்பு ஆலோசனை ஒரு அமலமரித்தியாகிகள் சபைக் குரு ஒருவர் இணை உதவி ஆயர் பதவிக்கு நியமனம் செய்யப்படும் ஆலோசனை வந்த பின்னணியில் வந்துள்ளது போல் தென்பட்டது. ஆயர் பெற்றக்கீனியின் உள்நோக்கம் எதுவாகவிருந்தாலும் யாழ் திருத்தூது மறைமாவட்டத்தைப் பிரிக்க வேண்டிய தேவை அப்போது இல்லையென்று கருதி ஆயர் பெற்றக்கீனியின் ஆலோசனையை செமேரியா அடிகள் நிராகரித்தார்.

செமேரியா அடிகளின் எண்ணப்படி இந்தப்பிரிப்பு ஆலோசனை கார்சியா அடிகளின் திட்டமாக இருக்கலாம் என்றும் இத்திட்டம் அமலமரித்தியாகிகள் சபையினரது நலன்களுக்கு எதிராக இருப்பது வெளியே அப்போதைக்குத் தெரியவில்லையென்றும் சந்தேகித்தார். செமேரியா அடிகள் இருசாராரதும் (அமலமரித்தியாகிகள் - அமல மரித்தியாகிகள் அல்லாதோர்) வரும்படியைக் கணக்குப் பார்க்கும் போது அமலமரித்தியாகிகள் சபையினர் பதினொருவர் மறைத்தளங்களில் பணியாற்றிக்கொண்டிருந்தபோது அமலமரித்தியாகிகளல்லாதோர் நான்கு பேர் மட்டுமேயிருந்தனர். எனவே ஒப்பீட்டளவில் அமலமரித்தியாகிகளுக்குக் குறைவானளவு பணமே கிடைத்தது. செமேரியா அடிகளின் கணக்குப்படி அமலமரித்தியாகிகளல்லாதோர் வருடாந்தம் 9000 பிராங்க் (Francs) பெற, அமலமரித்தியாகிகள் அதில் பாதியளவே பெறுவர். இந்தப் பணத்தைக் கொண்டு கணிசமானளவுக்குத் தரமான பாடசாலைக் கட்டமைப்பை எவ்வாறு பராமரிப்பது என்பது அவரது முக்கிய கேள்வியாக இருந்தது. செமேரியா அடிகளது இன்னுமொரு அங்கலாய்ப்பு இப்பிரிப்பு ஏற்பட்டால் ஆயர் பெற்றக்கீனி அமலமரித்தியாகிகள் இல்லாத பகுதிக்குச் சென்று தங்கிவிடுவார் என்பதாயிருந்தது. அத்துடன் இவ்வாறான செயற்பாட்டினால் யாழ்ப்பாணக் கத்தோலிக்கர் தமது உரிமைகள், கௌரவம் எல்லாம் நசுக்கப்படுகின்றனவென்றும் இதற்கெல்லாம் அமலமரித்தியாகிகள் தான் காரணம் என்றும் வெகுண்டெழுவர் என்றும் செமேரியா அடிகள் கருதினார்.

இந்தப் பின்னணியில் ஆயர் பெற்றக்கீனியவர்கள் வடமேல்மாகாணப் பகுதியில் உள்ள மறைத்தளங்களுக்கு அமலமரித்தியாகிகள் அல்லாதோரையும், வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அமலமரித்தியாகிகள் சபை மறைப்பணியாளரையும் நியமிக்கலானார். அதன்படி குயீடி (Guidi), ஒருனா (Oruna), விஸ்தாரினி (Vistarini), கார்சியா (Garcia) அடிகள் ஆகியோர் முறையே கற்பிட்டி, சிலாபம், வென்னப்புவ, கய்மல் ஆகிய மறைத்தளங்களுக்கு நியமனம் பெற்றனர்.

யாழ்ப்பாண நகரப்பகுதியை மோறோ (Mauroit) அ.ம.தி. பெல்லிசியர் (Pellisier) அ.ம.தி. அடிகள், செமேரியா (Semeria) அ.ம.தி. அடிகளும் வலிகாமம் பகுதியை றுவ்வியாக் (Rouffiac)அ.ம.தி. அடிகளும் ஊர்காவற்துறைப் பகுதியை சோர்ணவெல் (Chornavel) அ.ம.தி. அடிகளும், மன்னார் மாதோட்டப் பகுதிகளை விவியர் (Vivier) அ.ம.தி. அடிகளும், கீற்றிங் (Keating) அ.ம.தி. புளுரின் (Fleurin) அ.ம.தி. அடிகளும் விவியர் அடிகள் நோயுற்றதால் திருப்பியழைக்கப்பட்டு ஊர்காவற்துறைக்கும் ஊர்காவற்துறையில் பணியாற்றிக்கொண்டிருந்த சொர்ணவெல் அ.ம.தி. அடிகள் மாதோட்டத்திற்கும் அனுப்பப்பட்டனர். பருத்தித்துறை, திருகோணமலை, மட்டக்

அருட்பணி S.V.B. மங்களராஜா

களப்புப்பகுதிகளை செயின்ற ஜெனிஸ் (Saint Geneys) அ.ம.தி லெபெஸ்கோ (Le Besco) அ.ம.தி., மொக்கல் (Moukel) அ.ம.தி. அடிகளும் முறையே பராமரித்தனர்.

### ஆயர் பெற்றக்கீனியின் இறுதி நோய் யாழ் குடா நாட்டை விட்டு வெளியேறல் - செமேரியா அடிகள் ஆயர் பெற்றக்கினிக்கு வாரிசு ஆயராதல்

இவ்வேளையில் ஆயர் பெற்றக்கீனி மீண்டும் கடும் சுகவீனமுற்றார். இம்முறை அவரை பராமரித்த வைத்தியர்கள் ஆயருக்கு இதமான தென்பகுதிச்சுவாத்தியம் சற்று தென்பளிக்கும் என்று ஆலோசனை வழங்கினர். எனவே ஆயர் பெற்றக்கீனி யாழ்குடாநாட்டை விட்டு வெளியேறி தமது பரந்த திருத்தூது மறைமாவட்டத்தின் தென்பகுதியில் உள்ள போளவத்தைக்குச் சென்று தாம் முன்னர் அமைத்த இல்லத்தில் தங்கி ஓய்வெடுத்தார்.

ஆயர் பெற்றக்கீனி யாழ்குடாநாட்டை விட்டு வெளியேறிய அதே நாட்களில் இலங்கையில் (யாழ் திருத்தூது மறைமாவட்டத்தில்) பணியாற்றி வந்த அமலமரித்தியாகிகள் சபையினரின் முதல்வரும் ஆயர் பெற்றக்கீனியின் முதன்மைக் குருவுமாகிய செமேரியா அடிகளும் 1856 ஆம் ஆண்டு ஆகஸ்டில் பிரான்ஸ், மார்செயில் நகரில் துவங்கவிருந்த அமலமரித்தியாகிகள் சபையினரின் பொது அமர்வில் கலந்து கொள்ள சபை நிறுவுனர் ஆயர் புனித யூஜின் டி மசனட்டின் பணிப்புரைக்கமையச் செல்ல வேண்டியிருந்தது.

இவ்வாறாக ஒரட்டோரியன் சபைக்குருக்களின் பணிப்பொறுப்பிலிருந்து அமலமரித்தியாகிகள் சபையினரின் பணிப்பொறுப்புக்கு கைமாறும் காலத்தில் முக்கியமான காத்திரமான பங்கு வகித்த இருவராகிய ஆயர் பெற்றக்கீனியும் அவரது குரு முதல்வராகிய செமேரியா அ.ம.தி அடிகளும் ஒன்றாக யாழ் திருத்தூது மாவட்டத்தில் தேந்திர முக்கியத்துவம் வாய்ந்த யாழ் குடா நாட்டை விட்டு வெளியேறியமை முக்கியமான வரலாற்று நிகழ்வாகும். பின் இடம்பெற்ற நிகழ்வுகள் (ஆயர் பெற்றக்கீனி திரும்பி வராது இறந்தமையும் செமேரியா அடிகள் ஆயர் பெற்றக்கீனிக்குப் பிறகு வாரிசு ஆயராக நியமனம் பெற்று அருட்பொழிவு செய்யப்பட்டு திரும்பி வந்தமை) இதனை உறுதிப்படுத்துவதாயிருந்தன.

(அடுத்த இதழில் தொடரும்...)

# நதியைத் தேடிய கடல்

இஸ்ராயேல் நாட்டின் வடபகுதி எழில் கொஞ்சும் கலிலேயா வெண்முடி ஆடிய சிகரங்கள் வடக்கிலும் மேற்கிலும் மரகதப் பட்டென விரிந்த வயல் வெளிகள், தெற்கிலும் கிழக்கிலும் இவற்றிற்கெல்லாம் நடுநாயகமாக யாழ் வடிவத்தில் அமைந்த கென்சரேத்து என்றதொரு நீலக்கடல். அதன் ஒவ்வொரு அலையும் ஒவ்வொரு துளியும் ஆயிரம் கதை சொல்லும். இறைமகன் இயேசுவின் வாழ்வில் தனிஇடம் பெற்றிருந்த கலிலேயாக்கடல் அருகே தான் முதல் சீடர்கள் அழைக்கப்படுகிறார்கள். கலிலேயாக் கடலின் வட கிழக்குக் கரையில் அமைந்த பட்டணம் பெத்சாயிதா. இது நெய்தல் சிறப்பெல்லாம் ஒருங்கே அமைந்துள்ள வெண்மணல் கரையோரமாகும். இப்பகுதியில் யோனாவின் புதல்வரான சீமோன் அந்திரேயா இவர்களின் உறவினரான செபதேயுவின் புதல்வரான யாக்கோபு யோவான் ஆகியோர் மீன் பிடிக்கும் தொழில் செய்து வந்தவர்கள்.

வழக்கம் போல் ஒருநாள் இரவு சீமோன் (பேதுரு) குழுவினர் மீன்பிடிக்க அங்கு வந்தனர். அன்று இரவு முழுவதும் எத்தனையோ முறை வலைவீசிப் பார்த்தனர். அங்கு தவளையும் பாசியும் தான் வலையில் வந்து சிக்கின. மீன் எதுவும் அகப்படவில்லை. பொழுது விடிந்து காலைக் கதிரவன் தன் பொற் கதிர்களை விரித்துக்கொண்டு பவனிவரத் தொடங்கினான். தமது வாழ்விலே மறக்கமுடியாத நாள் அப்பொன்நாள் என்பதை அறியாத சீமோன் பேதுரு கனத்த இதயத்தோடும், கலங்கிய கண்களோடும் கடற்கரைக்கு வந்து படகினில் இருந்து கொண்டே வலைகளைப் பழுது பார்த்துக் கொண்டிருந்தார்.

அப்பொழுது வெள்ளை உடை அணிந்த அமைதியின் அண்ணல் யேசு அன்பர்கள் பலர் புடைசூழ அங்கே வருகை தந்தார். அவரது அருள்வாக்கினைக் கேட்பதற்காக கடற்கரையில் கூட்டம் பெருகியது. அவ்வேளை எதிரில் சீமோனின் படகு இருப்பதைக் கண்ட இயேசு சீமோனிடம் அவரது படகைக் கொடுத்து உதவும் வண்ணம் வேண்டுகிறார். அப்போது மீன் பிடிக்க உதவாத இந்தப் படகு போதகர் ஒருவருக்கு பயன்பட்டும் என்ற எண்ணத்தில் இயேசுவை படகில் ஏற்றிக் கொண்டார். அதேவேளை, போதகரின் போதனையில் சீமோனின் மனம் லயிக்க

வன்னி வாழ் இதயம் ம.சூசைமுத்து

வில்லை. அவர் உள்ளத்தில் மீன் கிடைக்கவில்லையே என்ற ஒரு அங்கலாய்ப்பு ஆதங்கம் நிழல் இட்டது.

திருவுரையாற்றி முடிந்தவுடன் மக்கள் விடைபெற்றுச் சென்றனர். இயேசுவின் கவனம் சீமோன் பேதுருவிடம் திரும்பியது. அவருடைய முகம் களைத்துச் சோர்ந்து இருந்ததைக் கண்டு, சீமோனையும் அவருடைய சகோதரரையும் பார்த்து, இயேசு அன்பர்களே படகை ஆழத்திற்குக் கொண்டு சென்று வலைகளைப் போடுங்கள் என்றார். உடனே சீமோன் 'குருவே, இரவு முழுவதும் நாங்கள் பாடுபட்டும் ஒன்றும் கிடைக்கவில்லை. ஆயினும் சொல்லை நம்பி இதோ வலைகளைப் போடுகிறோம் என்று உடனே அவரும் அவரது தோழர்களும் படகில் ஏறி அதை ஆழத்திற்குக் கொண்டு சென்று வலைகளை வீசினார்கள். அவ்வாறு செய்ததும் வலைகள் கிழியுமளவிற்கு ஏராளமான மீன் பட்டது. வலைகள் கிழியத் தொடங்கவே மற்றப் படகில் இருந்த தங்கள் தோழர்களுக்கு சைகை காட்டி உதவிக்கு வருமாறு அழைத்தனர். அவர்களும் வந்து படகுகள் இரண்டையும் மீன்களால் நிரப்பி, அவை மூழ்குவனபோல் இருந்தன. இதன்மூலம் இயேசுவின் தெய்வீகத்தை உணர்ந்த சீமோனுக்கும் அவர் தம் தோழர்களுக்கும் திகில் பிடித்து விட்டது. உடனே சீமோன் "ஆண்டவரே! நான் பாவி, என்னை விட்டு அகலும் என்று இயேசுவின் பாதத்தில் வீழ்ந்து கதறினார். 'இயேசுவோ நீ பாவி என்பதை ஏற்றுக் கொள்கிறாய்? அது போதும். நீ என் சீடனாவதற்கு இதுவரை நீ மீன்பிடிப்பவனாக இருந்தாய். இன்று முதல் நீ மனிதரைப் பிடிப்பவன் ஆவாய் என்றார். உடனே படகையும் வலைகளையும், மீனையும் கடலையும் ஏன் குடும்பத்தையுமே துறந்து விட்டு இயேசுவின் பின்னே செல்லத் தொடங்கினர். அவரோடு அவர் தம் சகோதரர், அவருடைய உறவினர் ஆகிய நால்வரும் இயேசுவின் சீடர்கள் ஆகினர்.

ஆம்! சீமோன் முதலில் 'இயேசுவுக்கு தன் படகைக் கொடுத்தார். பின்னர், தம் மனத்தைக் கொடுத்தார்.



இறுதியாக உயிரையே கொடுத்தார். 'பாறை' என்னும் பொருள் கொண்ட பேத்ரோஸ் ( கிரேக்கத்தில் தமிழில் பேதுரு) எனும் பெயரை சீமோனுக்கு இயேசு சூட்டினார்.

பாரத்தால் அமிழ்ந்து நின்ற
படகினைப் பார்த்த இயேசு
ஓரத்தில் இறங்கி வந்து
உள்ளன்பால் அழைத்து
இந்த நீருக்குள்
வலை வீசும் நீங்களே
மனிதர் வாழும்
ஊருக்குள் வலை வீசி
மனித உள்ளத்தைப்
பிடிப்பீர் என்றார்.

## 8ம் ஆண்டு நினைவுகளில்...



**சின்னத்துரை யாக்கோப்பு**
(வேலாயுதம்)

பிறப்பு 11.03.1924 இறப்பு 04.02.2010

தந்தைக்கு இலக்கணமாய்
தரணிதனில் நாமெல்லாம்
தலைநிமிர வாழவைத்த
தியாகத்தின் உருவே
எட்டாண்டல்ல பரத்தில் சந்திக்கும்வரை
உள்ளமதில் சுமந்து வாழ்வோம்...

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை

என்றும் உங்கள் நினைவில்
குடும்பத்தினர்

AD/17

## 2ம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்: 23.09.1927
மறைவு : 02.02.2016

அமரர்
**தியோகுப்பிள்ளை மரியதாஸ்**

"உயிர்ப்பும் உயிரும் நானே
என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"

AD/11 குடும்பத்தினர்

## 2ம் ஆண்டு நினைவலைகள்



**சூசைப்பிள்ளை மேரி இமல்டா**
**( பாக்கியம்)**

பிறப்பு 11.03.1944 சில்லாலை
இறப்பு 25.01.2016 நானாட்டான்

" சீவியத்திலும் என்னை நேசித்தவர்களே
மரணத்திலும் என்னை மறவாதீர் "

ஆண்டார்செட்டிறவெளி
நானாட்டான்

AD/13

பிரிவால் துயருறும்
கணவர், பிள்ளைகள்

## 20ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 30 . 09 . 1929
இறப்பு 04 . 02 . 1998

அமரர் **Dr.லோப்பையா மரியநாயகம்**

"உயிர்ப்பும் உயிரும் நானே
என்னில் விசுவாசம் கொள்பவன்
இறப்பினும் வாழ்வான்"
(யோவான் 11:25)

என்றென்றும் உங்கள் நினைவுகளோடு
சகோதரர்கள் குடும்பத்தினர்

அலுக்கை
அளவெட்டி.

AD/12

## விண்ணகப் பிறப்பின்
## 16 வது ஆண்டு நினைவு தினம்



மண்ணில் 11 - 04 - 1937
விண்ணில் 03 - 02 - 2002

அமரர்
**பத்திநாதர் அருளானந்தம்**

எம்மோடு என்றும் வாழும் இறைவா!
எம் அன்புத்தந்தை வழியாக நீர் எமக்குச் செய்த
நன்மைத்தனங்களுக்காக உமக்கு நன்றி
நவில்கின்றோம். உமது அளவு கடந்த அன்பினால்
அமைதி அளித்து இன்ப வான் வீட்டில்
இடமளித்தருள வேண்டுகின்றோம்
ஆமென்.

*புனித ஜார்ஜ் மாதா கோவிலடி*
*தும்பளை, பருத்தித்துறை.*

*அன்புடன் நினைவுகூரும்*
*குடும்பத்தினர்.*

AD09

## விண்ணக வாழ்வின்
## முதலாம் ஆண்டு நினைவு

27.01.2018

**அமரர் மேரி செசிலியா இராயப்பு**
(நேசம் ரீச்சர்)



மண்ணில் 11 . 10 . 1931
விண்ணில் 28 . 01 . 2017

அன்பினால் ஆட்கொண்ட அன்னையே
அன்றாடம் நினைக்கின்றோம் உன்னையே
அவனியில் ஆளாக்கிவிட்ட தாயே
ஆண்டவன் அமைதியில் இளைப்பாறுவாயே

சில்லாலை

பிரிவினால் துயருறும்
பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

AD/15

## 18ம் வருட நினைவஞ்சலி



அமரர்
**அந்தோனிமுத்து தேவராசா**

பிறப்பு: 30.11.1929
இறப்பு: 16.02.2001

## 2ம் வருட நினைவஞ்சலி



அமரர்
**தேவராசா கிறிஸ்ரீனம்மா**

பிறப்பு: 12.07.1935
இறப்பு :29.01.2016

"உயிர்ப்பும் உயிரும் நானே
என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வார்"

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

AD/10

## ௬ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில் 06 . 03 . 1935
இறைவன் அடியில் 28 . 01 . 2012

திரு
***யேக்கப் சூசைதாஸ்*** *(ஓய்வு பெற்ற அதிபர்)*

" நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன்
என் ஓட்டத்தை முடித்துக்கொண்டேன்
விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்
இனி எனக்கென வைக்கப்பட்டிருப்பது
நேரிய வாழ்விற்கான வெற்றி வாகையே "
(2.திமொ : 7 : 8)

AD/14

ஏழாலை கிழக்கு,
ஏழாலை

என்றும் மறவா
மனைவி,பிள்ளைகள்

# யாழ் மறைமாவட்டத்தின் புதிய நியமனங்கள்

புதிய ஆண்டின் நியமனத்தில் ஆயர் அவர்களினால் குருக்களுக்கான புதிய பணி நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. பங்குகளிலும் நிறுவனங்களிலும் புதிய நியமனங்கள் பெறும் குருக்களின் விபரம் :

அருட்பணி A.P. திருமகன்
– அதிபர் யா/ புனித பத்திரிசியார் கல்லூரி

அருட்பணி M.ஜெறோ செல்வநாயகம்
– பங்குத்தந்தை, பாசையூர்

அருட்பணி S.லியோ ஆம்ஸ்ரோங்
– பங்குத்தந்தை, இரணைப்பாலை

அருட்பணி P. இருதயதாஸ்
– பங்குத்தந்தை, திருநெல்வேலி

அருட்பணி J.A.யேசுதாஸ்
– பங்குத்தந்தை, கிளிநொச்சி
– கிளிநொச்சி மறைக்கோட்ட முதல்வர்

அருட்பணி பேனாட் றெக்னோ
– பங்குத்தந்தை, சுன்னாகம்

அருட்பணி A.எரிக் றொசான்
– பங்குத்தந்தை, புனித செபமாலை அன்னை ஆலயம், கொழும்புத்துறை

அருட்பணி சாள்ஸ் யஸ்ரின்
– பங்குத்தந்தை, உடுத்துக்குளம் ஆலயம்
– இயக்குநர், சுவாமித்தோட்டம், முல்லைத்தீவு

அருட்பணி M.சுதர்சன்
– பங்குத்தந்தை, புதுக்குடியிருப்பு

அருட்பணி R.ஒலிவர் ரெரன்ஸ்
– யாழ் ஆயரின் செயலாளர்

அருட்பணி H.எரோனியஸ்
– உதவிப் பங்குத்தந்தை, யாழ் மரியன்னை பேராலயம்

அருட்பணி P.J.றெக்சன்
– யா/ புனித பத்திரியார் கல்லூரி

பலோட்டைன்ஸ் துறவறசபை அருட்தந்தையர்கள்
– உடையார்கட்டு பங்கு

அருட்பணி A.A.அமலராஜன்
– பங்குத்தந்தை, உருத்திரபுரம்

அருட்பணி A.P.அன்ரனிப்பிள்ளை
– பங்குத்தந்தை, கரவெட்டி, நெல்லியடி.

# எழுவைதீவில் உறுதிப்பூசுதல்



எழுவைதீவுப் பங்கிலுள்ள 42 மாணவர்களுக்கு 31.01.2018 யாழ் ஆயர் அவர்களினால் உறுதிப்பூசுதல் திருவருட்சாதனம் வழங்கப்பட்டது.

எழுவைதீவு புனித தோமையார் ஆலயத்தில் நடைபெற்ற இந்நிகழ்வை பங்குத்தந்தை P.F.இராஜசிங்கம் அடிகளார் ஒழுங்கமைத்திருந்தார்.

## எழிலூர் வேளாங்கன்னி ஆலயத்தில் புனித யோசவ் வாஸ் ஆண்டு நிறைவுத் திருவிழா

பாசையூர், கொழும்புத்துறை, பண்டியன்தாழ்வு, மணியந்தோட்டம் பங்குகளைச் சேர்ந்த இறைமக்களால் கொழும்புத்துறை எழிலூர் வேளாங்கண்ணி ஆலயத்தில் புனித யோசவ்வாஸ் ஆண்டின் நிறைவு விழாவும் திருவிழாவும் அண்மையில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

யாழ் மறை மாவட்ட குரு முதல்வர் அருட்பணி P.J.ஜெபரட்ணம் அடிகளாரின் தலைமையில் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. பங்குத்தந்தை S.M.செபஸ்தியன் (அமதி) அடிகளார் இந்நிகழ்வுகளை சிறப்பாக ஒழுங்கமைத்திருந்தார்.

# யாழ் மறைமாவட்டத்தின் புதிய ஆலயங்கள்

மாஞ்சோலை தூய குழந்தை யேசு ஆலயம்



தவசிகுளம் புனித காணிக்கை அன்னை ஆலயம்



**மணிவிழாக் காணும்...**
(1ம் பக்கத் தொடர்ச்சி...)

Patrician Helesman என கல்லூரி சமூகத்தால் அவர் போற்றப்பட்டுள்ளார்.

மணி விழா நிகழ்வில் கல்லூரி சமூகத்தினருடன் குருக்கள், துறவியர் மற்றும் பெற்றோர், பழைய மாணவர்கள் எனப் பலரும் கலந்து அதிபருக்கு தமது வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்து நின்றனர்.

**கொழும்புத்துறை......**
(1ம் பக்கத் தொடர்ச்சி...)

மணியந்தோட்டம் பங்குத்தந்தை அருட்பணி. எஸ். எம். செபஸ்ரியன் அடிகளாரால் ஏற்பாடு செய்யப்பட்ட புனித யோசப் வாஸ் ஆண்டு நிறைவுதின விழாவின் ஆரம்பத்தில் மேற்படி துறைமுகத்திலிருந்தே புனிதரின் திருச்சுரூபம் எழிலூர் புனித. வேளாங்கண்ணி ஆலயத்திற்கு பவனியாக எடுத்துவரப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

**உள்ளூராட்சி...**
(1ம் பக்கத் தொடர்ச்சி...)

சட்டத்தில் இதுவரை இருந்து வந்த விருப்பு வாக்குமுறை இரத்தாகின்றது. அத்துடன் பெண்களுக்காக 25% பிரதிநிதித்துவம் உறுதிசெய்யப்பட்டுள்ளது. முன்னைய சந்தர்ப்பங்களில் பல்வேறு தேர்தல்களிலும் பெண்களுக்குக் கூடுதல் பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டுமென்று பல்வேறு மட்டங்களிலும் பேசப்பட்ட போதும் நடைமுறையில் பெண்களுக்கான பிரதிநிதித்துவம் மிகவும் குறைவாகவேயிருந்து வந்துள்ளது. தற்போது பெண்களுக்கான பிரதிநிதித்துவம் திருத்தப்பட்ட சட்டத்தின்படி 25% (அதற்கு மேலும் இருக்கலாம்) ஆக உறுதி செய்யப்பட்டமை வரவேற்கப்படவேண்டிய விடயம். எனவே வாக்களிக்கும்போது பொருத்தமான பெண்களை வேட்பாளர்களாக முன்னிறுத்தி அவர்களது கணிசமான பங்களிப்பை உறுதிசெய்யும் அரசியற்கட்சிகளையும், சுயேச்சைக் குழுக்களையும் இனம்காண்பதும் நல்லது. கொள்கையில் உறுதியான, மக்கள் நலனில் குறிப்பாகப் பாதிக்கப்பட்ட, பல்வேறு தேவைகளையுடைய மக்கள் பணியில் இதுவரையில் அர்ப்பணிப்புடனும் வெளிப்படைத்தன்மையுடனும் பணியாற்றி அவர்களுக்காகப் பல்வேறு மட்டங்களிலும் குரல்கொடுத்து வந்தவர்களை இனம் கண்டு அவர்களுக்கு உங்கள் வாக்குகளை வழங்குங்கள்.

நீங்கள் உங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்தாது விட்டால் மக்களுக்குக் குறிப்பாகப் பல்வேறு வழிகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பணியாற்றக் கூடிய மிகவும் பொருத்தமான வேட்பாளர்கள் தேர்ந்தெடுக்கபடாமல் போகலாம் என்பதை மனதில் கொள்ளுங்கள்.

தேர்தல் திணைக்களத்தினாலும் பவ்ரல் (Palfrel) போன்ற தேர்தல் கண்காணிப்பு அலுவலத்தினாலும் வெளியிடப்படும் இத்தேர்தல்கான அறிவுறுத்தல்களுக்கேற்ப உங்கள் வாக்குகளை அளியுங்கள்.

அருட்திரு S.V.B. மங்களராஜா
தலைவர் நீதி சமாதான ஆணைக்குழு



ஆனைக்கோட்டை புனித அடைக்கலநாயகி ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்ற திருப்பாலத்துவ சபை விழாவில் பங்குத் தந்தை அருட்பணி றோய் பேடினன் அடிகளாருடன் ஊக்குவிப்பாளர் மற்றும் சிறுவர்களைப் படத்தில் காணலாம்.

# வவுனியா பெரிய கோமரசன்குளம் கல்வாரித் திருத்தல வழிபாட்டு ஒழுங்குமுறைகள்

"நான் உங்களுக்கு புதிய இதயத்தை அருள்வேன்" (எசே 36:26) எனும் தொனிப் பொருளில் வவுனியா பெரிய கோமரசன்குளம் கல்வாரித் திருத்தலத்தில் தவக்காலத்தின் 40 நாட்களுக்கும் சிலுவைப் பாதை, பாவசங்கீர்த்தனம், திருப்பலி என்பன நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

வாரத்தின் வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் காலை 10.00 மணிக்கு நற்கருணை எழுந்தேற்றமும், 10. 30 மணிக்கு சிலுவைப்பாதையும், 12.00 மணிக்கு திருப்பலியும், மாலை 3.00 மணிக்கு திருமணத்தியாலம் மற்றும் நற்கருணை ஆசீரும் இடம்பெறும்.

நான்காம் வெள்ளி (09.03.2018) காலை 5.00 மணிக்கு பாத யாத்திரையும் 11.00 மணிக்கு மன்னார் மறை மாவட்ட ஆயர் தலைமையில் கூட்டுத் திருப்பலியும் இடம் பெறும்.

ஐந்தாம் வெள்ளி (16.03.2018) குணமாக்கல் வழிபாடும், மறுநாள் 17.03. 2018 பாடசாலை மாணவர்களுக்கான தியானம் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை இடம்பெறும். 18.03.2018 குடும்பங்களுக்கான தியானம் காலை 9.00 மணிமுதல் இடம்பெறும்.

பரிசுத்தவார வழிபாடுகள் இம்முறை முதற்தடவையாக கல்வாரித் திருத்தலத்தில் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலதிக விபரங்களுக்கு : கல்வாரித் திருத்தலப் பரிபாலகர் அருட்பணி இ. அகஸ்ரின் அடிகளாருடன் (தொலைபேசி இலக்கம் 0773454250) தொடர்பு கொள்ளலாம். மேலதிக விபரங்களுக்கு:

Viber; Face Book, Whats app, IMO, Messenger
- 0767371508

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம், 360, பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2018 ஆம் ஆண் வெளியிடப்பட்டுள்ளது.